911

Regd. No. M. 2210

வருஷ சந்தா ரூ. 1-8-0

Authoress & Proprietrix } வை. மு. கோதைநாயகி அம்மாள்.
(MRS. V. M. PARTHASARATHY IYENGAR)

ஜகன்மோகினி

மலர் 10 | 1933 ௵ அக்டோபர் ௴ | இதழ் 11

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 NOV 1933
MADRAS

கல்யாணி—அம்மா! எனக்கு இன்று ரூ. 1-8-0 கட்டாயம் கொடுக்கவேண்டும்.

தாயார்—எந்த வீண் செலவுக்காக் கேட்கிறாய்? உனக்கு எத்தனை சொன்னாலும் தெரியவில்லையா?

கல்யாணி—வீண் செலவில்லையம்மா! இதோ இந்த நோட்டீசைப் பார். உனக்கு மிகவும் பிரியமான ஜகன்மோகினிக்கு டிசம்பர் மாதம் 11-வதாண்டு பிறக்கப்போகிறது. அதன் சந்தாவை இப்போதே அனுப்பி அவர்களை உற்சாகப்படுத்துவதுடன் நாமும் பரிசுப்போட்டியில் கலந்து கொள்ளத்தான் கேட்கிறேன்.

தாயார்—ஓ! அதற்கா? இந்தா, உடனே அனுப்பி விடு. உன் அத்தை பேருக்கும் சேர்த்து ரூ. 3-அனுப்பு. அவர் ...ந்து நாம் பிறகு வாங்கிக்கொள்ளலாம்.

JL
m211, N124JN
N133·10·11.
20047

"...கினி" ஆபீஸ்,
...தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

தனிப் பிரதி விலை: உள் நாடு, அணா 2: வெளி நாடு, அணா 3

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதியில் சஞ்சிகை வெளியாகும்.

ஒரு அரிய சந்தர்ப்பம்!

இனி ஸ்திரீகளும் இன்ஷியூர் செய்யலாம்.

தற்போது நமது தேசம் மாறுபட்டுள்ள நிலைமையில், முன்னை விட அதிகமான ஸ்திரீகள் தங்கள் ஆயுளை இன்ஷியூர் செய்ய வேண்டியதின் அவசியத்தையும், அதற்கு வேண்டிய வசதிகள் அளிக்க முடியு மென்பதையும் கருதி,

யுனைடெட் இந்தியா அஷியூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

சில நிபந்தனைகளுக் குட்பட்டு, ஸ்திரீகளின் ஆயுள் இன்ஷியூரன்ஸ்களை இப்பொழுது ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறது.

ஸ்திரீகளின் ஆயுள் இன்ஷியூரன்ஸ் சம்மந்தமான முழு விவரங்களும் தங்கள் கடிதம் கண்டவுடன் அனுப்பப்படும்.

படித்த ஸ்திரீகளிடமிருந்து இந்த கம்பெனியின் ஏஜண்டு பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தக் கம்பெனியின் ஏஜண்டாக இருப்பதால், நமது ஜன சமூகத்திற்குத் தொண்டு புரியவும், ஒரு நிரந்தரமான வருமானம் அடையவும் சந்தர்ப்பம் வாய்க்கின்ற தென்பதைக் கவனியுங்கள்.

"யுனைடெட் இந்தியா" கட்டடம்
செம்புதாஸ் தெரு,
சென்னை.

எம். கே. ஸ்ரீநிவாஸன்,
பி. ஏ., பி. எல்.,
மானேஜிங் டைரெக்டர்.

பொறுமையின் பொக்கிஷம்

அல்லது

படாடோபத்தின் பரிபவம்

வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதியது

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 NOV 1933
MADRAS

முதல் பதிப்பு

பிரசுராலயம் :

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

திருவல்லிக்கேணி, சென்னை.

காபிரைட்] 1933 விலை அணா. 8

PRINTED AT

THE TATA PRESS

5, THAMBU CHETTY ST., MADRAS.

ஸ்ரீ

முதல் அதிகாரம்.

210047

கெடுவோன் கேடு நினைப்பான்

"சந்திரா! இன்று பண்டிகை நாளாகையினால் நிறைய அழகிய கோலம் போடம்மா; கோலமிடுவதின் தத்துவம் வெகு மேன்மையானது. பார்ப்பதற்கு ரமணீயமாக விருப்பது மட்டுமல்லாமல் அதனால் பெரிய புண்ணியமும் உண்டாகிறது. ஈ, எறும்பு, காகம் முதலியவைகள் அந்த அரிசி மாவைத் தின்று தமது பசியை யாற்றிக்கொள்கின்றன. அவைகளுக்கு அது ஆகாரமாவது ஓர் 'பெரிய புண்ணியமல்லவா?

(அது தெரியாமல் சிலர் சுண்ணும்பு மாவைக் கொண்டு கோல மிடு கின்ருர்கள்.)

இந்த நல்ல நோக்கத்தைக் கொண்டு தான் நம் முன்னேர்கள் காலையில் எழுந்த உடன் முதல் தருமமாயும், கடமையாயும் இந்த சுபமான காரியத்தை ஏற்பாடு செய்திருக்கிருர்கள்." என்று 40 வயது மதிக்கக்கூடிய லக்ஷ்மியம்மாள் தன் மருமகளைப் பார்த்துக் கூறினுள்.

குடும்பத்திற்கேற்ற குணவதியாயும், நற்குண நன்னடத்தை யில் சிறந்து விளங்கும் தருணீமணியாயும், பெரியாருக்கு அடங்கி மரியாதையாய் நடந்துகொள்ளும் குணபூஷணியாயும், பதி பக்தி, தெய்வ பக்தி, தேசபக்தி, ஏழைகளிடத்து அன்பு முதலிய அருமை யான குணங்களைக் கவசமாக அணிந்தும் விளங்கும் சந்திரா என்னும் வனிதா ரத்தினம் தன் மாமியார் சொல்லியதை வெகு மரியாதை யாகக் கேட்டுக்கொண்டு, அவளை வணங்கி விட்டு ஓர் கிண்ணத்தில் கோல மாவை எடுத்துக்கொண்டு வீதியில் வந்தாள்.

பசுஞ் சாணமிட்டுப் பசேலென்று மெழுகி பெருக்கிச் சுத்தமாக வைத்திருக்கும் வீதியில் சந்திரா தன் பெயருக்கு ஏற்றவாறு சந்தி ரன் பிரகாசிப்பதுபோல அழகிய கோலமிட்டாள். அழகே உருக் கொண்ட அக்காலையின் மகிமையும், சிலுசிலுப்பான காற்றின் சுகமும் பசு பக்ஷி பதினுயிரம் ஜாதிகளையும் பரவசமுறச் செய்யு மல்லவா? கழுத்தில் மணிகளும், காலில் சதங்கைகளும் கட்டியுள்ள பசு மாடுகள் கல கல கல வென்று நடந்து லக்ஷ்மியின் கூட்டம் போல ஒப்பார நடையும், இனிய ஒலியும், மக்களின் மனத்தைப் பரவச முறச் செய்யும் வண்ணம் மேய்வதற்குச் செல்லுகின்றன.

அவைகளின் கன்றுக் குட்டிகள் "அம்மா! அம்மா!" என்று கூவியவாறு துள்ளித் துள்ளிக் குதித்துத் தமது தாயின் பின் செல் லும் காக்ஷி வெகு மனேகரமாயும், ஆநந்தமாயு மிருந்தது. அன்று வெள்ளிக்கிழமை வரலக்ஷ்மி விருதமாகையினுல் எல்லா வீடுகளிலும் அழகிய கோலங்களும், செம்மண்; பூச்சும், மாவிலைத் தோரணங்

களும் வெகு அழகாக விளங்கின. அன்று செல்லும் பசு மாடு களுக்குக் குங்குமம், மஞ்சள் பூசி அவற்றின் கொம்பில் புஷ்பங்க ளைச் சுற்றி இருந்தது வெகு அழகா யிருந்தது.

நமது சந்திரா வீதியில் கோலமிடுகையில் அந்த மாட்டுக் கூட்டம் சென்றதால் அதனை அழகு பார்த்துக் கொண்டபடியே நின்றாள். "பசுக்கள் இலக்குமியின் அம்சம் என்று சொல்லு கிறார்களே! இவைகளைக் கண்டால் மனத்தில் சாக்ஷாத் ஸ்ரீ மகா லக்ஷ்மியைக் காண்பதுபோலவே தோன்றுகிறது. என்ன அழகாகச் செல்கின்றன!" என்று தனக்குள் தான் எண்ணி மிக்க களிப்புடன் கோலமிட்டுக் கொண்டிருக்கையில் ஓர் காளை மாடு ஒரு கன்றுக் குட்டியோடு சண்டை யிட்டுக்கொண்டே ஓடி வந்து சந்திராவை ஒரே முட்டாக முட்டித் தள்ளிவிட்டு ஓடியது.

பசுக் கூட்டங்களின் அழகில் மெய்ம்மறந்து ஈடுபட்டுக் கோல மிடுகையில் இந்த சம்பவம் நேர்ந்த உடன் "ஹா!" என்று சத்த மிட்ட படியே சந்திரா கீழே விழுந்து விட்டாள்.

அச்சமயம் அங்கு வந்த அவளுடைய மைத்துனனாகிய மணி என்பவன் இச்சம்பவத்தைக் கண்ணாரக் கண்டும் ஒரு விதமான உதவியும் செய்யாமல் "ஓகோ! சரியான பனிஷ்மெண்டு (தண் டனை) தான். கர்வம் பிடித்தவர்களின் கதி இதுதான். மாட்டுக் கூட்டத்தையும் ஜெயிக்க இவளால் ஆய்விடும் என்று எண்ணிவிட் டாள் போலும். வேணும்; வேணும்!" என்று கரம் வைத்துக்கொண்டு அவ்விடமே நின்று பார்த்தான்.

இதற்குள் அக்கம் பக்கம் கோலம் போட்டுக் கொண்டிருந்த பெண்கள் ஓடி வந்து, அங்கு கிடக்கும் சந்திராவைக் கண்டு பதறித் தூக்கி உள்ளே கொண்டு போய் "மாமீ! சந்திராவை மாடு முட்டி விட்டது. உங்கள் சிறிய மகன் அதைப் பார்த்துக்கொண்டு நின்றும் ஒரு வித உதவியும் செய்யாம லிருந்தது நிரம்ப அழகா யிருக்கிறது. இப்படியும் ஆபத்து சமயத்தில் இருப்பார்களா?" என்று கூறிக் கொண்டே அவளுக்குச் சிகிச்சை செய்தார்கள்.

சந்திராவுக்கு அடிபட்டு விட்டதால் அன்று பூஜை செய்ய எத்தனையோ ஆவலாக எண்ணிய படி செய்யக் கூடாமல் போயிற்று. தன் பொருட்டு உபகாரம் செய்த அண்டை அயல் வீட்டுக்காரர்களுக்கு வந்தனங் கூறி யனுப்பினாள். தன் மைத்துனன் தன்னைப் பார்த்துக் கரம் வைத்துக் கூறியதும், அவன் நின்ற மாதிரியும் சந்திரா அப்போதே கவனித்தாள். அவள் மனத்திற்கு அது மிகவும் வருத்தமாக விருந்தது. நான் எத்தனையோ சகஜமாக எண்ணி இருக்கையில் என்மீது அம் மனிதனுக்கு க்ஷாத்திரம் உண்டாவதற்குக் காரணம் என்ன?'' என்று தனக்குள் வருந்தினாள்.

வெளியில் சென்றிருந்த அவள் கணவனான பாலசுந்தரன் வீட்டிற்கு வந்ததும், தன் மனைவிக்கு உற்ற அபாயத்தைக் கேட்டு மிகவும் வருந்தி, கட்டிலின்மீது படுத்திருக்கும் சந்திராவைப் பார்த்தான். அவளுடைய காலில் அடி பட்டு வீங்கி இருந்ததோடு, சில விடங்களில் சிராய்த்து மிருந்தது. அவனுடைய தாயார் காப்படம் (ஒத்தடம்) போட்டுக் கொண்டிருந்தாள்.

லக்ஷ்மி:—பாலூ! இன்று நமது சந்திராவுக்கு ஒரு கண்டமென்றுதான் கூறவேண்டும்; அப் பாழுங் காளை மாடு முட்டியதோடு, மிதித்திருக்குமாயின் நம் கதி என்னவாகி இருக்கும்? அந்த வரலக்ஷ்மிதான் இன்று இவளுக்கு உயிர்ப் பிச்சை கொடுத்தாள். இன்னும் ஸ்நானம்கூடச் செய்யவில்லை. வேலையோ கிடக்கிறது.

பாலு:—அம்மா! இந்த ஒத்தடத்தை நான் கொடுக்கிறேன் நீ சென்று வேலையைக் கவனி. இன்று பூஜை நடக்க வேண்டுமல்லவா—என்றான். உடனே லக்ஷ்மியம்மாள் எழுந்து சென்றாள்.

பாலு ஒத்தடங் கொடுக்கத் தொடங்கி "தன் சொந்த மனைவிக்குத் தான் வேலை செய்வதைச் சிலர் வித்யாசமாகவும், பரிகாஸமாகவும் எண்ணிப் பேசுகிறார்கள். அதைக் கண்டால் எனக்குச் சிறிதும் பிடிப்பதில்லை. புருஷர்களுடைய சுகத்திற்கும், துக்கத்திற்கும், கஷ்டத்திற்கும், நஷ்டத்திற்கும் சம பாதியாகப் பாகம் பெற்றுள்ள மனைவியும் புருஷனும் உயிரும் உடலும் போன்றவர்களல்லவா!

அவர்களில் ஏற்றத் தாழ்வு உண்டா? ஆபத்து சமயத்தில் இவ்வி தம் பார்த்து விலகும் எந்த புருஷனும் புருஷனாக மாட்டான். பெருங் காண்டாமிருகந்தான் என்று நான் நினைக்கிறேன். சே! மிருகங்களுக்குக் கூட பாச மிருக்கிறதே! ஆதலால் நீ சங்கோசப் படாதே! சந்திரா! உன்னுடைய முகத்திலிருந்தும், செய்கையி லிருந்தும் நீ சங்கோஜப் படுவதாகத் தெரிகிறது. அத்தகைய வித்யாசம் வேண்டாம்.

சந்திரா! நேற்று இரவு நான் ஏதோ ஒரு துர் சொப்பனங் கண்டேன். உடனே விழித்துக்கொண்டு வெகு நேரம் கவலையுற்றுப் புரண்டேன். பகவானைத் தோத்திரஞ் செய்தேன். அதன் பிறகு ஒருவாறு தேறினேன். என் பயத்திற்குத் தக்கபடி இதோ உனக் கோர் ஆபத்து வந்து விட்டதே! மிகவும் பலமாக அடி பட்டு விட் டதா! வலி ஜாஸ்தியா யிருக்கிறதா?" என்று கேட்டான்.

சந்தி:—நாதா! அப்படியொன்றுமில்லை. பயப்பட வேண்டாம். ஏதோ கொஞ்சந்தான் அடிபட்டிருக்கிறது. போதும். பிராணநாதா! ஒத்தடம் போதும். நீங்கள் வெறுமனே உட்கார்ந்து பேசுங்கள். நாதா! என்மேல் கோபிக்கக் கூடாது. தங்கள் தம்பியைப் பற்றி யாரேனும் எதுவாகினும் சொன்னால்கூட நீங்கள் அதைக் காதில் வாங்கலாகாது. என்ன காரணம் பற்றி அவர் என்மீது கடும் பகை கொண்டிருக்கிறாரோ தெரியாது. இன்று மாடு முட்டும்போது அவர் பார்த்துக் கொண்டிருந்தும், அம் மாட்டையும் விலக்காது விலகி நின்று என்னைத் திட்டினார். இதைக் கண்ட அண்டை அயல் வீட்டார் வியப்புற்றார்கள். உங்களிடம் இதைக் கூறுவதாகச் சங்கரன் தெரி வித்தான். அவன் கூறக் கேட்டால் உங்களுக்குக் கோபம் வரும். அந்த ஆத்திரத்தில் தம்பியைத் திட்டி விடுவீர்கள். ஆகையினால் அதை முதலில் நானே தெரிவிப்பது மேலெனத் தெரிவிக்கிறேன்.

பாலு:—ஆகா! இது பெரிய வியப்பாக இருக்கிறதே! சத்து ருக்களுக்கு ஆபத்து நேர்ந்து விட்டாலும், அச் சமயம் காப்பாற் றிக் கை கொடாமலிருக்க முடியாதே! நீ என்ன சத்துருக்களையும் விடக் கேடாகி விட்டாயா! சந்திரா! இந்தப் பயல் இந்த வரையும்,

நம் சகவாஸத்தையும் விட்டுப் பட்டணத்திற்குப் படிக்கச் சென்ற தின் பலன் இதுவா! எத்தனே மக்கள் பட்டணத்தில் நன்ருகப் படித்து நற்குணத்துடன் விளங்க வில்லே! அவர்களைப் பார்த்துப் பழகலாகாதா! உம்...விதி! விதி! அவனே மோசம் செய்து அம்மா உனக்கும் எனக்கும் ஏதோ கொடுத்து விடுவதாக அவன் நினைத்து விட்டான். அதற்குத் தக்கபடி சில கலகக் கொள்ளிக் கட்டைகளும் சேர்ந்திருக்கின்றன: இவ்வளவு தூரம் வந்த பிறகு வேறு என்ன வேண்டும்? கண்மணீ! இப்போது அவன் எதற்கு வந்திருக்கிருன் என்பது உனக்குத் தெரியுமா?

சந்தி:—எனக்குத் தெரியாதே! எதற்கு நாதா! கல்யாணம் நடக்கப் போகிறதா! பெண் பார்த்தாயிற்ரு?

பாலு:—அட அசடே! கல்யாணத்திற்குப் பெண் பார்க்கும் பொறுப்பு உனக்கும் எனக்கும் வராது. அதையும் அவனே செய்து கொள்வான். அப்படி நம்மிடம் வருவதாயின் வெகு சந்தோஷமாகச் செய்து முடிக்கலாம். அதுவெல்லாம் கிடையாது. பாகத்தைப் பகிர்ந்து கொண்டு போக வேண்டுமாம். அதற்காகவே இப்போது வந்திருக்கிருன். படிக்க ஆரம்பித்த நாளாக "பண மனுப்பு; பண மனுப்பு" என்கிற கடிதத்தைத் தவிர வேறு கடிதம் கிடையாது. 'வீண் செலவு வேண்டாம். டம்பாச்சாரித்தனம் வேண்டாம்' என்று நயமாகக் கடிதமெழுதிவிட்டாலோ அதற்குப் பதில் எழுதும் அனர்த்தத்தைக் கூற முடியாது. அம்மாவும் அப்பாவும் தலேயில் அடித்துக் கொள்வார்கள். "எனக்குப் பணங் கொடுப்பதென்ருல் உங்களுக்குக் கண்ணீர் வருகிறது. அண்ணனும்,மன்னியும் அவர்களுடைய அரை டஜன் உறவுக்காரர்களும் தின்று உருட்டுவது உங்களுக்குச் சந்தோஷமாயிருக்கும். என்னே ஜம்பமாகப் படிக்க அனுப்பிவிட்டு இப்படி பண மனுப்ப அழுகிறீர்களே! இனி நான் படிக்கவில்லே. எங்கேனும் குப்பை வாறப் போகிறேன். கக்கூஸ் கழுவப் போகிறேன். பிச்சை எடுக்கிறேன். கிணத்தில், குளத்தில் விழுந்து சாகிறேன். நீங்கள் சுகமாக இருங்கள்." என்று தடபுடலாக எழுதிவிட்டான்.

அப்பா அதற்குப் பதிலே போடாது பணத்தை யனுப்பி வருகிறார். நன்மை உரைப்பது நஞ்சாக முடிகிறது. சோதாப் பயல்களின் சகவாசத்தினால் அவர்களோடு சினிமா, நாடகம், ஓட்டல் முதலிய இடங்களுக்குச் சென்று வீண் செலவு செய்துத் திரிகிறுனும். இவைகளைக் கண்டிப்பது இப்போது அவனுக்குப் பெரிய குற்றமாக விருக்கிறது. இதன் பலன் பிறகு தெரியும். நேற்றிரவு முற்றும் தந்தையோடு சண்டை செய்தான்.

சந்தி:—நாதா! ஸ்னோவும், வித விதமான சோப்புக்களும், செண்டுகளும் தைலங்களும் வீணுக வாங்கவேண்டாமென்று கூறியதற்கு என்னை நேரில் எத்தனையோ முறை திட்டி யிருக்கிறார். சகவாஸத்தின் பயன் இது!—என்று இவர்கள் பேசிக்கொண்டே இருக்கையில் உள்ளே ஏதோ பெரிய சண்டை இடுவது போன்ற குரல் கேட்டது. இருவரும் திடுக்கிட்டு நடுங்கினார்கள். "சந்திரா! நான் சென்று பார்த்து விட்டு வருகிறேன். நீ இங்கேயே இரு. எழுந்திருக்காதே!'' என்று பாலு கூறிவிட்டுச் சென்றான்.

"அடேய்! இன்று பண்டிகை நாள். அதிலும் வரலக்ஷ்மி விருதம் செய்யும் நாள். இன்று வீணுக இப்படிச் சண்டை செய்வது அழகல்ல. ஏற்கெனவே மன்னிக்கு அடி பட்டு இன்று ஒரு கண்டம் தீர்ந்ததெனப் படுத்திருக்கிறாள். அதுவே மனத்திற்கு வருத்தமாக விருக்கிறது. அப்படிக்கிருக்க இந்த வேளையில் நீ இவ்விதமான மூடத்தனம் செய்வது சற்றும் நன்றாக இல்லை.'' என்று பாலுவின் பிதாவாகிய தர்மலிங்கம் சொல்லி முடிப்பதற்குள், மணி வெகு சீற்றத்துடன், "அப்பா! இந்த தளுக்குக் கதை எல்லாம் எனக்கு வேண்டாம்! மன்னியை நீங்கள் நடத்தும் முறையும், அவள் நடத்தையும், சாகஸமும் எனக்குத் தெரியும். அந்த வார்த்தை என்னிடம் வேண்டாம். அவளால்தான் நீங்கள் பாழாகிவிட்டீர்கள். ஏன் நம் குடிக்கே அனர்த்த முண்டாகிவிட்டது. அப்பாவிக்குப் பரிந்து வேறு பேச்சுக்கள் பேசவும் வேண்டுமா! நீர்தான் அவளுடைய தாசன். அண்ணன்தான் அவள் கைப்பாவை. அம்மாதான் அவளுடைய அடிமை! இவ்விதமான வகையில் என்னையும் சேர்க்க முயல்கிறீர்களோ! இந்த பாச்சா என்னிடம் பலிக்காது. நீர் அவளை மருமகளாகவா நடத்து

றீர்! வெளியார் அதைக் கேவலமாக இழிந்து பேசுவது உமது செவியில் விழவில்லைபோ லிருக்கிறது. இந்தக் கிழவனுக்கு இவ்வித மும் புத்தி கெட்டு விடுமா என்று உலகம் நகைக்கிறது." என்று முடிப்பதற்குள்,

கிழவர் தலையில் அடித்துக்கொண்டு, பொங்கிய கோபத்துடன் "சீச்சீ! சண்டாளா! இத்தகைய தறிதலையை என் மகன் என்று சொல்லத்தான் என் மானம் போகிறது; ஆகா! என்ன வார்த்தை சொன்னுய்? அண்ணன் மனைவி அன்னைக்குச் சமம் என்று ராமா யணம் முறையிடுகிறது. அடேய்! நீ நல்ல விருத்திக்கு வரவேண்டும்; நல்ல சகவாஸத்துடன் மேன்மையாக விளங்க வேண்டும் என்று உன்னை நான் படிக்க வைத்துப் பட்டணம் அனுப்பியது எனக்கே எமனுகி விட்டதே! சீச்சீ! நாயே! என் கண் முன்பு நில்லாதே! ஓடி விடு பாதகா! உன் பொருட்டாக நான் செலவிட்டதெல்லாம் விழ லுக் கிறைத்த நீர் போலாகிவிட்டது. இனிமேல் உனக்குக் காலணு கொடுக்க முடியாது; ஓடி விடு. பெற்ற பிதாவின்மீது பாசமற்றுத் தாறுமாருக உளறும் உன்னிடம் மரியாதையா! ஒத்த பைசா கொடுக்கமாட்டேன். போய்விடு." என்ருர்.

பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்பது பழகிய மொழியல்லவா! இந்த வார்த்தைகளை எல்லாம் கேட்டுக்கொண் டிருந்த லக்ஷ்மியம்மாளின் மனம் கொதிக்கிறது. தன் கணவன் மீதும் மருமகள் மீதும் அபாண்டமான வார்த்தை கூறியது அந்த அம்மாளுக்குச் சற்றும் சகிக்கவில்லை; எனினும் புத்திர வாத்ஸல்யம் நடுவே குறுக்கிடுகிறது. இந்நிலைமையில் அந்த அம்மாள் தன் மக னின் இரு கான்களையும் பிடித்துக்கொண்டு "அடேய், மணீ! உனக்கு ஏனடா இவ்விதம் புத்தி கெட்டு விட்டது? உன்னைப் பெற்ற பிதாவையும் மாதாவையும் உன்க்குத் துரோகிகளாக எண்ணிவிட்டாயானல் உனக்கு உற்ருர் யார் என்று நினைக்கிருய்! தந்தையைப் பார்த்து நீ இவ்விதம் கூறுவது தர்மமா! உன் அண்ண னும் அண்ணியும் உன்மீது அளப்பரிய மதிப்பும், அபார வாஞ்சை யும் வைத்திருப்பதைச் சற்றுமறியாது இவ்விதம் உளறுகிருயே! அவர்கள் மனம் நொந்தால் அது உனக்கு க்ஷேமமா! இளங் கன்று

பயமறியாது என்னும் பழமொழிப்படி நீ துள்ளுகிறாய்! உனக்கு இத்தனை கலகம் எந்தப் பாதகர்கள் செய்தார்களடா! ஏற்கெனவே நீ தாம், தூம் என்று செலவு செய்து கண்டபடி கெட்டுத் திரிகிறாய் என்று சின்ன தம்பி சொன்னான். அது போதாமல் உன் பாகத்தையும் பெற்று அழிக்க எண்ணுகிறாயே இது என்ன கெடுமதி!'' என்று முற்றுங் கூறுவதற்குள்,

மணி சீறி விழுந்து "சே! விலகிப்போ! மருமகளுக்கும் கிழவனுக்கும் உடந்தையாக விருக்கும் உன் புத்தி எவ்வித மிருக்கும்? இப்படித்தான் தோன்றும். என் பாகத்தைக் கொடுக்கப்போகிறீர்களா! இல்லையா! ஒரே பேச்சு'' என்று கூறிக்கொண்டே தாயைப் பிடித்துத் தள்ளினான். வயதான அம்மாது தள்ளப்பட்ட வேகத்தில் தடாரென்று விழுந்தாள்.

பாலு ஓடோடிச் சென்று தாயாரைத் தூக்கிய படியே, "சீச்சீ! சோதாப் பயலே! பேசுவது இன்ன தென்று தெரியாமலும், செய்வது இன்னதென்று புரியாமலும் செய்கிறாயா! உன் மூளை கலங்கி விட்டதா? நெருப்பை ஈ மொய்க்கிறதென்றதனாலேயே ஈ மொய்க்காது. என் மனைவியையும் பிதாவையும் பற்றிய அபிப்பிராயம் கடவுளுக்குத் தெரியும். உன் ஊத்தை வாயினால் அளக்கவேண்டாம். மூடாத்மாவே! ஓடிப்போ!'' என்று உரத்த குரலால் கூறினான்.

வந்துவிட்டது மணிக்குக் கோபம். "ஆஹ்ஹா! நீ யாரடா என்னைத் திட்டுவதற்கு? பெண்டாட்டிக் கைப் பெட்டியிலடங்கிக் கிடக்கும் வெட்கங் கெட்டவனே! நீயா என்னைக் கண்டிக்க வந்துவிட்டாய்?'' என்று கூறியவாறு கையில் வைத்திருந்த வாக்கிங்கு ஸ்டிக்கை—பிரம்பை—வீசிப் பாலுவின்மீது எறிந்துவிட்டுப் போய் விட்டான்.

லக்ஷ்மியம்மாளின் விசனம் கூறத் திறமற்றுவிட்டது. வரலக்ஷ்மி விருதமாகிய நல்ல நாளில் வீட்டுக்கு அலங்காரவதியாகிய சந்திராவை மாடு முட்டித் தள்ளியதும், சிறிய புதல்வன் ரகளை செய்ததும் அவளுக்கு ஏதோ ஓர் பெரிய அபசகுனம் போலத் தோன்றியது. கண்ணீர் விட்டுக் கொண்டே அன்று காரியம் செய்

யப் புகுந்தாள். கோபத்தோடு ஓடிய மணி எங்கு சென்றுவிட்டானோ என்ற பயம் ஒரு புறம் வதைக்கிறது.

மணியைக் காணவில்லை. சாப்பிடுவதற்கு லக்ஷ்மியம்மாள் தேடினாள். எங்கும் அவனைக் காணவில்லை. அவன் எவ்வளவு துஷ்டனாக விருப்பினும் லக்ஷ்மியம்மாளின் வயிறு கேட்பது கஷ்டமல்லவா! "மணியைக் காணவில்லையே! எங்கு சென்றானோ தேடிப் பாருங்கள்" என்று தர்மலிங்கத்தினிடம் கூறினாள். அவருக்கிருந்த மனக் கொதிப்பில், மனக் கசப்பில் "அவன் எக்கேடு கெட்டால் எனக்கென்ன? நான் தேடமாட்டேன். தானே வந்து நாய்போலத் தின்னட்டும்" என்று கண்டிப்பாய்க் கூறி விட்டார். பாலு மட்டும் தாயாரோடு சற்று அலைந்தான். எங்கும் காணவில்லை. அவன் மீண்டும் பட்டணந்தான் சென்றிருப்பான் என்று தீர்மானித்து பட்டணத்திலுள்ள இவர்களின் பந்து ஒருவருக்குக் கடிதமெழுதி விசாரித்ததில் அங்கு வந்திருப்பதாகப் பதில் கிடைத்து விட்டது.

அச் செய்தியைக் கேட்ட பெற்றோர் "சனியன் எவ்விதமேனும் துலையட்டும்" என்று வெறுப்பு கொண்டார்கள். எத்தனை விதமாக நன்மதி புகட்டியும் கேளாத மணியின் விஷயம் அவர்களை வாட்டி வருத்திக்கொண்டே இருந்தது. அடிபட்டுப் படுத்திருந்த சந்திராவுக்கு இவ் விஷயங்கள் முற்றும் செவியில் பட்டன; எனினும் என் செய்வாள் பாவம். தன் மைத்துனனுக்கு நற்புத்தி கற்பிக்க வேண்டி அப்போதும் பொறுமையோடு கடவுளை வேண்டிக் கொண்டாள். சில தினங்களில் அவளுக்கு உடம்பு நன்றாகக் குணமாகி விட்டது. அவள் வழக்கம்போலத் தன் வேலைகளைக் கவனித்து வந்தாள்.

மணியினிடமிருந்து கடிதமே சில நாள் வரவில்லை. பெற்ற பாசத்தினால் தாயார் மட்டும் யாருக்கும் தெரியாமல் சில கடிதங்கள் எழுதினாள். அவற்றிற்கும் பதிலில்லை. இவர்களிருப்பது கிராமம். இதைச் சுற்றி அரை மைல், ஒரு மைல் தூரத்திலுள்ள கிராமங்களுக்குத் தலைக் கிராமமாக இது விளங்கியது. கணக்குப் பிள்ளை, முனிசிப்பு முதலியவர்கள் இந்தக் கிராமத்தில் உண்டு. ஒரு தினம்

பக்கத்தில்—5 மைல் தூரத்திலுள்ள—ஓர் ஊரில் பெரிய உத்ஸவம் நடந்தது. அதற்கு தர்மலிங்கம் தமது குடும்பத்துடன் கிளம்பிச் சென்றார். சந்திரா என்றும் வெளியில் சென்றதே வழக்கமில்லை. அன்றுதான் புதிதாக அவளை உத்ஸவத்திற்கு அழைத்துச் சென்றார்கள். தங்கள் கிராமத்தைத் தவிர இதர கிராமவாசிகளை அன்றுதான் காண நேர்ந்தது.

கோயிலில் மேளமும், தாளமும், ஸ்வாமி பூஜையும், வீதிப் புறப்பாடும் வெகு வைபவமாக நடக்கின்றன. ஸ்வாமி தரிசனம் செய்து விட்டு பாலுவும் சந்திராவும் ஊரைச் சுற்றிப் பார்த்து வருவதற்கு மாமி, மாமன் உத்திரவு பெற்றுச் சென்றார்கள். ஒவ்வொரு வீட்டுப் பெண்மக்களும் கும்பல் கும்பலாகக் கூடி வம்பு பேசிப் பொழுதை வீணாகக் கழித்துக் கொண்டிருந்தார்கள். சிறு பிள்ளைகளும், பெண்களும் கோலி முதலியன விளையாடிக் கொண்டிருந்தார்கள். சில பெண்பிள்ளைகள் குளத்தில் நீராடியவாறும், பாத்திரம் துலக்கியவாறும் ஏதோ சச்சரவுடன் பலத்த சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். பதினெட்டு, இருபது வயதான ஆண் பிள்ளைகள் சீட்டாட்டம், சூதாட்டம் முதலியன ஆடித் தண்ட பொழுது போக்கிக் கொண்டிருந்தார்கள்.

இந்த லீலைகளை எல்லாம் கண்ட சந்திராவுக்கும் பாலுவுக்கும் மிக்க வியப்பாக விருந்தது. இவர்கள் இவ்வித அநாகரிகமாய் கல்வி வாசனையற்று மவுட்டீகத் தன்மையாகச் சண்டையிடுவதையும், வீண் காலக்ஷேபம் செய்வதையும் காண மிக்க அருவருப்பாக விருந்தது. வீடுகளையும் அவர்களின் உடைகளையும் காண வெகு அசுசியாய் சுகாதாரத்திற்கு முற்றும் விரோதமாக விருந்தது. இந்த மாதிரி இவர்கள் இருக்கும் மாதிரியில் எத்தனை விதமான நோய்கள் தாமாக உண்டாகும்!” என்று அவர்கள் சற்று சிந்தித்தார்கள்.

பாலு இருப்பது கிராமமாயினும் அந்த கிராமத்திலிருக்கும் ஜனங்கள் இத்தனை மோசமாக விருக்கவில்லையாதலால் இந்த ஆபாசம் அவர்களுக்குச் சகிக்க முடியவில்லை. அந்த தம்பதிகள் தமக்குள் ஏதோ பேசிக்கொண்டார்கள். சில பெண்கள் குழந்தை

களின் மூக்கைச் சிந்தி, கண்ட இடத்தில் போட்டுவிட்டு கையைத் தம் சேலையில் துடைத்துக் கொண்டார்கள்.

இதைக் கண்ட சந்திரா மெல்ல அவர்களிடம் சென்றாள். அழகே உருக்கொண்ட அங்கனுமணியைக் கண்ட கிராமவாஸிகள் எல்லாம் வெல்லப் பண்டத்தை ஈ மொய்ப்பதுபோலச் சந்திராவைச் சுற்றிக்கொண்டு "ஆகா! என்ன அழகுடீ! என்னமாத்தான் இருக்காடீ! அம்மா! நீ யாரம்மா? அவன் யாரு ஒன் புருஷனா?'' என்று கேட்டார்கள்.

பூர்ண கிரணத்துடன் பிரகாசிக்கும் சந்திரனைப் போன்ற சந்திரா வெகு இனிமையாகப் பேசத் தொடங்கி "ஆமாம்: இவர் என் பர்த்தா; நாங்கள் கருங்குடி என்ற கிராமத்தி லிருப்பவர்கள். ஸ்வாமி தரிசனத்திற்காக வந்தோம், என் மாமியார், மாமனார் இருவரும் சன்னிதியில் இருக்கிறார்கள். நாங்கள் ஊரைச் சுற்றிப் பார்ப்பதற்காக வந்தோம். இந்தக் குழந்தைகளை எல்லாம் ஏன் இப்படித் திரிய வைக்கிறீர்கள்? அருகாமையில் எங்கேனும் பள்ளிக்கூடமிருப்பின் அதற்கு அனுப்புவதற்கென்ன! வீணாக இவ்விதம் விளையாடி அறிவென்பதைப் பெறாத மூடமாகி விடுகிறார்களே! அதோடு அவர்களுக்கு சுத்தமென்பதே தெரியவில்லையே! இவைகளை நீங்கள் கற்றுக்கொடுத்துப் பழக்கவேண்டாமா?'' என்றாள்.

இதைக் கேட்ட ஒரு ஸ்திரி "ஆமாம்! படிச்சவாள்ளாம் பொரட்டிப்புட்டாங்க. எங்க மாமன் மகன் B. A. படிச்சியிருக்கரானும். வேலெயே இல்லாமெ அலையறானும். இப்படிதாங் கடக்கட்டுமே!'' என்று அலக்ஷியமாகக் கூறினாள்.

சந்தி.—அப்படி நீங்கள் நினைக்கக் கூடாது! பி. எ. படித்து வேலையகப்படாமலிருப்பதை ஏன் உபமானமாக எடுக்கவேண்டும். ஒன்றுமே படிப்பில்லாமல் எத்தனை பேர்கள் நல்ல பதவியில் இல்லை! இது அவரவர்களின் அதிர்ஷ்டம். படித்தால் உயர்ந்த பதவியைக் கோரித்தான் படிக்கவேண்டுமென்பது கிடையாது. நான் சொல்வது என்னவெனில் படிப்பிலிருந்து எத்தனையோ நன்மைகளைப் பெறலாம். அபார அறிவை அறியலாம். நல்ல புத்தகங்களைப் பொழுது

போக்காகப் படித்து விஷயங்களை அறியலாம். நன்மை, தீமை, பகுத்தறிவு பெறலாம். சுகாதாரமாக இருக்கப் பழகலாம். அதோ பாருங்கள். மூக்கைச் சிந்திப் போட்டு விட்டுக் கையைப் புடவையில் துடைத்துவிட்டீர்கள். அந்த மூக்குச் சளி எங்கே விழுந்திருக்கிறது பாருங்கள். அதோ தோசை சுடுகிறார்களே அதன் பக்கத்தில் விழுந்துவிட்டது. அந்த சளி எத்தனை அசங்கியமானது? அதன் மேல் உட்காரும் ஈக்கள், கொசுக்கள், இதர சிறிய பூச்சிகள் அங்கிருந்து அந்த தோசைமீது உட்காரும். அவ்வாறு உட்கார்ந்தால் எத்தனையோ கெட்ட வியாதிகள் அதனால் வரும். இவைகளை எல்லாம் படிக்கத் தெரிந்திருந்தால் சுகாதார நூல்களைப் படித்துத் தெரிந்துகொள்ளலாம். இந்த விஷயங்களை முதலில் ஸ்திரீகள்தான் நன்றாகத் தெரிந்துகொள்ளவேண்டும்.'' என்று சந்திரா பிரலங்கம் போலத் தன் யாழினும் இனிய சாரீரத்தினால் பேசிக்கொண்டே இருந்தாள்.

அச்சமயம் அத் தெருவின் கோடியில் 7–8 தடியர்கள் கூட்டமாக வந்துகொண்டிருந்தார்கள். அவர்களின் ஆரவாரமும், பேச்சும் ஒன்று கூடி அவர்களைப் பார்க்கு முன்பே அக் கூட்டம் சோதாக்களின் கூட்டமென்று விளங்கியது அக்கூட்டம் பானுவும் சந்திராவும் நிற்குமிடத்திற்குச் சிறிது தூரத்தில் வந்ததும் "அதோ! அதோ! அவங்களாடா ஒங்க அண்ணனும் அண்ணியும்.'' என்று சிலர் கேட்டார்கள்.

"ஆமாம்! அந்த கபிதைகள்தான். தூத்தூ! ஏழைகளுடனுடம், பிச்சைக்காரர்களிடமும் சற்றும் நாகரிக மில்லாமல் பேசுகிறார்கள் பார். பெண்டாட்டி சாமியார் அவன்தாண்டா! வாங்கடா! இங்கே எதற்கு நிற்கவேண்டும்?'' என்று கூறிக்கொண்டே மணி நடக்க வாரம்பித்தான்.

அதே சமயம் அக்கூட்டத்தில் மணியைக் கண்ட சந்திரா வியப்புடன் "நாதா! அதோ உங்கள் சகோதரர் போகிறார். கூப்பிடுங்கள்'' என்றாள். அப்போதே கவனித்த பானு சகோதர வாஞ்சை போடும், அவன் பானுள்ள குற்றத்தைப் பொறுத்தும் அவனை நோக்கி "மணீ! மணீ!'' என்று அழைத்தான். மணி திரும்பிப் பாராமல்

போய்விட்டான். இச் செய்கை தம்பதிகளின் மனத்தைப் புண்படுத்தியது. அதற்குமேல் அங்கு பேசுவதற்கு மனங் கொள்ளாமல் நேரே கோயிலுக்குச் சென்று இச் செய்தியை தர்மலிங்கத்தினிடமும், லக்ஷ்மியம்மாளிடமும் தெரிவித்தார்கள்.

இதைக் கேட்ட பிதா வெகு ஆத்திரமும் வெறுப்பும் கொண்டு "ஹா! பெற்ற அன்னைக்குச் சமதையான சந்திராவையும், பெற்ற அப்பனையும் அநியாயமாய்ப் பேசிய சண்டாளனை நான் தேடிச் செல்வதா? கழுதை என் காலில் வந்து விழட்டும். அப்போதும் எனக்குப் பழய பாசம் வருவது அரிது" என்று கடிந்து பேசினார். லக்ஷ்மியம்மாளின் மனம் மட்டும் கேட்கவில்லை. "மணியனா வந்திருக்கிறான்! எங்கே? எங்கே?" என்று கேட்டுக்கொண்டே எழுந்து ஓடினாள்.

கூட்டத்தின் மத்தியில் நுழைந்து சென்று மகனைத் தேடினாள். "மணி! மணி!" என்று கூவிக்கொண்டே சென்றாள். நான்கு பேர்கள் கூடியிருக்கும் கும்புகளை எல்லாம் பார்த்துக்கொண்டே சென்றாள். அங்கு முன்பு தெரிவித்த சில தடியர்களுடன் மணி ஆநந்தமாக சிகரெட் பிடித்து அந்தப் புகையை மூக்கினாலும் வாயினாலும் விட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

இந்த வைபவ நிலைமையில் அவனைக் கண்ட லக்ஷ்மியம்மாள் "அடே! மணி! என்னடா அப்பா குழந்தாய்! இந்த துஷ்டச்செய்கை எதற்கடா? அப்பா! என்னை மறந்தே போய்விட்டாயே! இங்கே வாடா; கண்ணே!" என்று கூறிக்கொண்டே அருகில் சென்றாள். மணி பெற்ற அன்னை என்கிற பாசம் சிறிதுமின்றி சீறி விழுந்தவாறு, "அடாடா! என்ன அன்பு ஒழுகுகிறது. விபசார மருமகளைத் தட்டிக் கொடுத்துக் கொழுக்கச் செய்வதும், பெரிய மகனுக்குக் கள்ளத்தனமாக ஆஸ்தி சேர்ப்பதும் என்னைப் பக்ஷபாதமாக நினைத்திருப்பதும் நானறியாத முட்டாள் இல்லை. எனக்குப் பெற்றோரும் சத்ருக்கள்; உற்றோரும் சத்ருக்கள். ஒரு செப்புக் காசு கொடுக்க மாட்டேனென்று கூறிய கல் நெஞ்சக்கார அப்பனின் சொத்து எனக்கு ஒரு துரும்பும் வேண்டாம். இனி உங்கள் சொத்தையும்

மிகவும் குறைந்த விலை !

தபால் செலவு இனாம் !!

நாவல் வாசிப்போருக்கு நல் விருந்து.

நமது "ஜகன்மோகினி"யின் பதினொன்றாவதாண்டுக் கொண்டாட்டத்தை முன்னிட்டு, நமது நாவல்களை ஏழ்மை நிலையிலிருப்பவர்களும் வாங்கி வாசித்து இன்புற வேண்டுமெனக் கருதி, கீழ்க்கண்ட பங்குகளாகப் பிரித்து விலைகளை மிகவும் குறைத்ததுடன், தபால் செலவின்றி அனுப்ப ஏற்பாடு செய்துள்ளோம். முன் பணமாகத்தான் அனுப்ப வேண்டும். வி. பி. கிடையாது.

இந்த அரிய சந்தர்ப்பம் டிசம்பர் மாதக் கடைசி வரையில்தான் இதைக் கைவிடின் மறுபடியும் நேராது.

பங்கு 1	பங்கு 2	பங்கு 3
ரூ. 3-8-0	ரூ. 3-8-0	ரூ. 3-4-0
சாமளநாதன்	வைதேகி	நவநீதகிருஷ்ணன்
சண்பக விஜயம்	ருக்மிணிகாந்தன்	பரிமள கேசவன்
கௌரீமுகுந்தன்	சுகந்த புஷ்பம்	உத்தம சீலன்
		மூன்று வைரங்கள்

பங்கு 4	பங்கு 5	பங்கு 6
ரூ 3-4-0	ரூ. 3.	ரூ. 2-4-0
பத்மசுந்தரன்	ராதாமணி	கதம்பமாலை
சாருலோசனு	ஸாரமதி	சோதனையின்
	நளினசேகரன்	கொடுமை
		வீரவஸந்தா

மேற்கண்ட பங்குகளாக இல்லாமல் வெவ்வேறு புத்தகங்கள் வேண்டியவர்கள் ஏழரை ரூபாய் பெறுமான புத்தகங்களுக்கு ஐந்து ரூபாய் அனுப்பினால் அவற்றைத் தபால் செலவின்றி அனுப்புவோம்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

பதினேன்ருவது ஆண்டுப் பரிசுகளின் விவரம்.

புது வருஷ சந்தாவை டிசம்பர்மீ 20-ந் தேதிக்குள் அனுப்பும் சந்தா நேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப் போட்டு 6 பிரைஸ் சீட்டுகள் எடுத்து அவற்றிற்குப் பின் வரும் விவரப்படி பரிசுகள் கொடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

முதல் பரிசு ரூ. 25	3-வது பரிசு ரூ. 10
2-வது பரிசு ரூ. 15	3-பரிசுகள் ரூ. 5 விகிதம்

ஐந்து சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுக்கும் நேயர்கட்கு அடுத்த ஆண்டின் சஞ்சிகையை இனமாக அனுப்புவதுடன், அவர்களும் ஷை பரிசுப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

உங்களுக்கு எந்த நாவல் இனமாக வேண்டும்?

கீழ்க்கண்ட விவரத்தைப் படித்து, உங்களது நேயர்களின் சந்தாவை அனுப்பும்போது, வேண்டிய புத்தகங்களின் பெயரைத் தெரிவியுங்கள். மறு தபாலில் செலவின்றி அனுப்புகிறோம்.

		பரிசு புத்தகங்கள்
(1)	ஒரு புதிய சந்தாதாரரைச் சேர்த்து முன் பணமனுப்புகிறவர்களுக்கு	இன்பமனேகரி
(2)	2 புதிய சந்தாதாரர்களை ,,	நளினசேகரன் அல்லது மூன்று வைரங்கள் அல்லது வீரவஸந்தா
(3)	3 ,, ,,	கோபாலரத்னம்
(4)	4 ,, ,,	கதம்பமாலை அல்லது சுகந்த புஷ்பம்
(5)	5 ,, ,,	கௌரீமுகுந்தன் அல்லது ஸாரமதி
(6)	6 ,, ,,	சண்பக விஜயம்
(7)	7 ,,	சாமளநாதன் அல்லது ருக்மிணீகாந்தன் அல்லது நவநீதகிருஷ்ணன்
(8)	8 ,, ,,	வைதேகி அல்லது பத்மசுந்தரன் அல்லது ராதாமணி அல்லது சாருலோசன அல்லது பரிமளகேசவன் & உத்தமசீலன்

தயவு செய்து

புது வருஷ சந்தாவை

முன் பணமாக அனுப்புங்கள்.
வி. பி. யில் அனுப்பச்
சொல்வதால் உங்களுக்கு
அனுவசியச் செலவும்,
கால தாமதமுமே.

நமக்குத் தெரிந்த வரையில்

தமிழ்ப் பத்திரிகையுலகில் இது வரை நடை பெறாத சம்பவம்

இனம் முற்றிலும் இனம்

இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்படும் நாவல்கள்

நமது

ஜீவிய சந்தா நேயர்களுக்கு இனம்.

இதர சஞ்சிகைகளைப் போல நாமும் ஜீவிய சந்தா ஏற்படுத்த வேண்டுமென்று அநேகர் கோருவதால், ரூ. 25/- முன்பண மனுப்புகிறவர்களை நமது ஜீவிய சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்வதுடன், இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு, நம்மால் பிரசுரிக்கப்படும் எல்லா நாவல்களையும் இனமாக அனுப்புவோம்.

பதினேன்றுவது ஆண்டு

"ஜகன்மோகினி"

இம் மாதாந்த சஞ்சிகை ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய அற்புதமான நாவல்களையும், அநுபவ நீதிசாரங்களையும் தன்னகத்தே தாங்கிக் கொண்டுள்ளது. இதன் பதினேன்றுவது ஆண்டு 1933 ஹு டிசம்பர் மீ முதல் ஆரம்பம். இதில் வெளியாகும் நாவல்கள் ஒரு வருடத்தில் டிம்மி சைஸில் ($8\frac{1}{2}'' \times 5\frac{1}{2}''$) சுமார் 600 பக்கங்கள் ஆகின்றன. அந்த வருடம் முடிந்ததும், தனி நாவல்கள் (தபாற் செலவு தவிர) ரூ. 3-க்கு விற்கப்படும்; ஆகையால் "ஜகன்மோகினி" க்குச் சந்தாதாராய்ச் சேர்ந்து விடுவதால் குறைந்த சந்தாவில் நிறைந்த பக்கங்களையுடைய நாவல்களை அடைவதுடன், மேற்படி நூலாசிரியை எழுதிய இதர நாவல்களையும் இப்பக்கத்தில் கண்டுள்ள குறைந்த விலைக்கு வாங்கிக் கொள்ளலாம் என்பதைக் கவனிக்கவும்.

மாதிரிப் பிரதி இனும்!

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதிய நாவல்கள்.

					"ஜகன்மோகினி" சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை		
வைதேகி (2 பாகங்கள்)	2	8	0	...	2	0	0
பத்மசுந்தரன்	2	8	0	...	2	0	0
ராதாமணி (2 பாகங்கள்)	2	8	0	...	2	0	0
சாருலோசனை (2 பாகங்கள்)	2	8	0	...	2	0	0
காதலின் கனி	2	8	0	...	2	0	0
நவநீதகிருஷ்ணன்	2	0	0	...	1	12	0
ருக்மிணிகாந்தன்	2	0	0	...	1	12	0
சாமளநாதன்	2	0	0	...	1	12	0
சண்பகவிஜயம்	1	12	0	...	1	8	0
சௌரீமுகுந்தன	1	12	0	...	1	8	0
ஸாரமதி	1	12	0	...	1	8	0
சோதனையின் கொடுமை	1	8	0	...	1	4	0
பரிமளகேசவன்	1	4	0	...	1	0	0
உத்தமசீலன்	1	4	0	...	1	0	0
சுகந்தபுஷ்பம்	1	0	0	...	0	14	0
கதம்பமாலை	1	0	0	...	0	14	0
கோபாலரத்னம்	0	14	0	...	0	12	0
நளினசேகரன்	0	8	0	...	0	6	0
வீரவஸந்தா	0	8	0	...	0	6	0
மூன்று வைரங்கள்	0	8	0	...	0	6	0

ரூ. 21 · முன்பண மனுப்புவோருக்கு மேற்கண்ட 20 நாவல்களையும் தபாற்செலவின்றி அனுப்புவோம்.

"ஜகன்மோகினி" ஆபீஸ், 26, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

பங்கையும் நான் பிணமாக மதித்துவிட்டேன்: நானே ஓர் சாமர்த்தியசாலியா யிருந்துப் பின் மானமுள்ளவனும், ரோஷமுள்ளவனும், அதிர்ஷ்டசாலியாய், பிடிவாதக்காரனும், வலிமை பெற்றவனும் இருப்பின், என் கையினாலேயே, என் மூளையினாலேயே, நான் சம்பாதித்து பெரிய கோடீச்வரனாக ஆகிறேன் பாரு. எனக்குள் தோன்றிய பிடிவாதத்தை நிறைவேற்றாது நான் போவதில்லை. இந்த ஏழ்மை வாழ்க்கை எனக்கு வேண்டாம்; இதனால் நான் இதுபரியந்தம் அனுபவித்த துன்பம் போதும். பணமில்லாதவன் பிணத்திற்கும் கடையனே யாவன். பணத்திற்கு நான் அடிமையாகி, பணத்தைத் தெய்வமாக நான் வணங்கி, அதையே நான் அடையாவிடில் என் வாழ்க்கை வியர்த்தமாகும். எனக்கு அப்பனும் வேண்டாம், அன்னையும் வேண்டாம். அண்ணனும் வேண்டாம்; யாரும் வேண்டாம்; நான் லக்ஷாதிப் பிரபுவான பிறகு பிக்ஷாதிப்பிரபுவாகிய நீங்கள் என் காலில் விழ நினைப்பீர்கள். அந்த காலமும் வராமல் போகாது. எனக்கு முக்கியம் பணம்: பணம்: பணம்." என்று கூச்சலிட்டு ஆத்திரத்தோடு கத்தினன்.

கூட விருந்த சகபாடிகள் "பேஷ் பேஷ்: (hear, hear) என்று கத்தினர்கள். இதைக்கேட்ட—கண்ட—லக்ஷ்மியம்மாளின் மனங் கொதித்தது. "ஐயோ! மூடத்தனமாகத் துள்ளுகிறானே என்று வருந்தியவாறு "அடேய், மணி! நான் ஏற்கெனவே சொல்லியது போல இளங்கன்று பயமறியாது என்றபடி நீ துள்ளுகிறாய். வேண்டாம்! இத்தனை அறிவு கெட்ட பிடிவாத குணம் வேண்டாம். பணத்தைச் சம்பாதிக்க நீ பிரயத்தனப்படு; வேண்டாமென்று கூறவில்லை; ஆனால் பணத்தையே மட்டும் நம்பி மோசம் போகாதே! பணத்தால் நீ உலகையே சாதிக்கலாம் என்று நினைக்கிறாயே; அது வடிக்கட்டிய முட்டாள்தனமான பேச்சு. பணத்தினால் மாத்திரம் நீ பெறமுடியாத வஸ்துக்கள் அனேகம் உண்டு. அவைகளை நீ இழக்க நினைக்காதே; வீண் டாம்பீக வார்த்தையாடாதே" என்று கூறி முடிக்குமுன்,

மணி எழுந்து "சே! இந்த கிழத்தின் பிரசங்கம் நமக் கெதற்கடா? வாருங்கள். பணத்தினால் பெறமுடியாத பொருளே உலகத்திலில்லை. பணத்தினால் நான் கடவுளைக்கூட நேரில் காணப்போகி

றேன். கடவுளும் பணத்திற்கு அடிமைதான்.'' என்று கூறிக் கொண்டே அவ்விடத்தை விட்டுப் போய்விட்டான். அப்போதும் லக்ஷ்மியம்மாள் பெற்ற பாசத்தினுல் "அடேய் மணி! மணி! போகாதே நில்லு; நில்லு: பணத்தினுல் நீ பெறமுடியாத வஸ்துக்கள் அனேகம் உள்ளன. அதை நீ மறக்காதே! மணி! பெற்ற அன்னை யின் மனத்தைப் புண்ணுக்காதே!'' என்று கூறிக்கொண்டே சென் ருள். மணி திரும்பியும் பாராமல் சோதாக் கூட்டங்களுடன் வேக மாகச் சென்று மறைந்தான். அந்தோ! பத்து மாதம் மணியனுக்கு இருக்க இடங் கொடுத்த வீட்டுக்காரியானதால் லக்ஷ்மியம்மாளின் வயிறு கொதிக்கின்றது. சற்று நின்று பார்த்தாள். கண்ணீர் மாலை மாலையாக உதிருகின்றது. புண்ணுகிய மனத்துடன் மணி சென்ற திக்கையே நோக்கிப் பார்த்த வண்ணம் கல்லாய் நின்று விட்டாள்.

2-வது அதிகாரம்

அதிர்ஷ்டம் நிறைந்தால் அனைத்தும் மறக்கும்

சென்னையில் அதிகமான ஜன சங்கமும், நிமிடத்திற்கு நூறு வண்டிகள் போய்க்கொண்டும், விபத்துக்கள் நடந்துகொண்டுமிருக்கும் தெருக்க ளில் சைனு பஜார், ப்ராட்வே இவைகள் முக்ய ஸ்தானம் பெற் றவை எனலாம்: அத்தகைய வீதிகளில் ஒன்ருகிய சைனு பஜார் வீதியில் ஓர் பெரிய அழகிய வீட்டின் மேன் மாடத்தில் தனி யறையொன்றில் சாய்மான நாற்காலியில் படுத்தவாறு மணி தன் மனத்துடனேயே பலத்த யுத்தம் செய்து கொண்டிருந்தான்.

அப்போது அஸ்தமித்து எங்கும் இருள் சூழ்ந்து கொண் டது. மணியினுடைய அறையில் ஓர் மின்சார விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவனைத் தவிர அங்கு வேறு யாருமே கிடை யாது. மணி அடிக்கடி தன் கையை ஆட்டியும், முகத்தைச் சுளித்

தும் செய்த செய்கைகள் கோபமாயும், அழுத்தமாயும், உறுதியாயும் உள்ளது போன்ற தோற்றங்களைக் காட்டின. இடையிடையே 'ஆம்; ஆம்' என்ற சொல்லும் வெளிப் போந்தது. "சீச்சி! நாம் ஏன் இத்தனை முட்டாளாக இருந்துவிட்டோம். ஐயோ! ஆதி முதல் உள்ள நம் வாழ்வை எண்ணினால் மிகவும் வெட்கமாக விருக்கிறதே! நாயும், நரியும், ஆடும் மாடும், பன்றியும் பெருச்சாளி யும் ஓடி யலைந்து கத்திக் குரைத்து ஊளையிடும் பெரிய பட்டிக் காட்டில் இடிந்ததும் இடியாததுமான மண் சுவர்கள் உள்ள ஓட்டை வீட்டில் நாம் அநாகரிகமாக வளர்ந்து விட்டோமே. சேச்சே!

நான் சிறிய வயதில் இருந்ததை எண்ணினால் எனக்கே வெட்கமாயிருக்கிறது. படுப்பதற்குக் கட்டில் மெத்தை யுண்டா! ஓலைப் பாயும், கோரைப் பாயும் மூங்கில் கட்டிலில் போட்டுப் படுத் துறங்கினேன். கட்டக் கந்தையோ அழுக்கு ஒரு முழம் பிடித்ததும், நாற்புறமும் ஜன்னல்போலக் கிழிந்ததும் உடுத்தி யலைந்தோம். காலை யில் ருசியாகக் காப்பியும் பலகாரமும் என்றேனும் கண்டிருப் போமா! புளித்த பழையதும் ஊறுகாயும் நினைத்தால் இப்போது வாந்திக்கு வருகிறது. கிழிந்த அரிச்சுவடியும் திண்ணைப் பள்ளிக்கூட மும், தூங்கு மூஞ்சி வாத்தியாரும் தூத்தூ! இத்தகைய ஏழ்மை நிலைமையில் நாம் எப்படித்தான் வசித்தோமோ! மாடு மேய்க்கும் பசங்களுடனும், ஆடு ஓட்டும் சிறுவர்களுடனும், ஏத்தம் இறைக் கும் தடியர்களுடனும் திரிந்து சுற்றிய காலத்தை நினைக்கின் எனக்கே வெறுப்பாக விருக்கிறது.

ஒரு கண் காட்சி யுண்டா! ஒரு கடற்கரை யுண்டா! ஒரு சினிமா, ட்ராமா உண்டா! திரும்பிப் பார்த்தால் வயலும் வேலியும், தோட்டமும் துறவும், மரமும் செடியும், சப்பாத்திக் கள்ளியும் குளங்களும் குட்டைகளும், மலையும் மண்ணும்...சீச்சி! இவற்றைத் தவிர வேறு உண்டா! நம்முடைய நல்ல காலத்திற்கே நம்முடைய பெரிய அப்பா இங்கு கொண்டு வந்து என்னைப் படிக்க வைத்தார். இனிமேல் நான் நாகரிகத்தை யறிந்தவனானேன்; படிப்பிலும் ஏதோ கொஞ்சம் தேறி B. A. வகுப்பில் சேர்ந்து விட்டோம். இனி மேல் என்ன குறைவு? நான் இன்றே ஓர் சபதம் செய்துகொண்டு

அதன்படி நிறைவேற்றுவதையே முதல் கடமையாகக் கொள்ளப் போகிறேன்.

எல்லாவற்றையும் விடச் சிறந்தது எது? உலகத்தில் சகல சாம்ராஜ்யத்தையும் கொடுத்துச் சிறப்பிக்கச் செய்வது எது? இகத்திலும் பரத்திலும் அழியாத ஆநந்தத்தை அடையச் செய் வது எது? ஒரு மனிதனை உச்ச நிலையில் கொண்டு வைப்பது எது? ஆம்! ஆம்....எல்லாவற்றிற்கும் பணந்தான் ப்ரதானம். பணமே முக்கியம்; பணமே ஜீவன்! பணமே என் குல தெய்வம்! பணமே என் உண்மையான தோழன்; பணமே என் காதல் விதை. பண மில்லாதவன் பிணமே!

இனி அக் கிழட்டுப் பிணங்களின்...முரட்டுத் தடியன் அண் ணனின்....முகத்திலும் விழிப்பதில்லை. அவர்களுக்கு முன்பு நான் நவ கோடி நாராயணனுகி வாழப் போகிறேன்! என்னுல் கூடிய ப்ரயத் தனத்தைச் செய்யாவிடின் என் பெயர் மணி இல்லை. இது சத் தியம்! சத்தியம்! முக்காலும் சத்தியம். எந்த விதத்தில் பணத் தைச் சேர்ப்பது என்பதுதான் நாம் கவனிக்க வேண்டியது.'' என்று தனக்குள் பலமான தீர்மானத்தைச் செய்துகொண்டு சபதம் செய் தான்.

உடனே சில குறிப்புகளை அவன் டைரியில் எழுதிக்கொண் டான். பிறகு ஓட்டலுக்குச் சென்று போஜனம் செய்துவிட்டு மீண் டும் தன்னிருப்பிடம் வந்தான். தினசரி பத்திரிகையைப் படிக்கத் தொடங்கினன். புத்தி எதிலும் ஓடவில்லை. தான் எப்படி பணக் காரனுவது என்ற விஷயத்தையே எண்ணி எண்ணி இரவைக் கழித்தான்.

மறு தினம் காலையில் அவனுக்கு ஒரு கடிதம் வந்தது. அதைப் படிக்கலானன்:

"அடேய்! மதம் பிடித்த மணி!

பெற்ற அன்னை என்ற பாசம் சற்றுமில்லாமல் அவளை உதாசீனம் செய்துவிட்டு வந்தது உனக்கு அடுக்குமா? அவள்

210047

கண்ணீர் உன்னை முற்றும் ஒழித்து விட்டதா: உன்னைப் பத்து மாதம் சுமந்து பெற்ற அன்னையல்லவா? உனக்கு பாகம் கொடுக்கவில்லை என்று நீ துள்ளுவது வேடிக்கையாக விருக்கிறதே! நம்முடைய ஸ்திதி உனக்குத் தெரியாதா? க்ராம வாசிகள், அதிலும் அதிகமான பூஸ்திதியுமற்ற ஏழைகள். உன்னைப் படிக்க வைக்க வேண்டுமென்று தோன்றின பேராவாவினால் நமக்குள்ள சொல்ப நிலத்தில் வருமானங் குறைந்துவிட்டதால் அதை அடகு வைத்தும் சிலவற்றை விற்றும் உனக்கு உன் அண்ணன் பணமனுப்பி உன்னை விருத்திக்குக் கொண்டுவரும் பொருட்டுப் பாடுபடுவதைச் சற்றேனும் நீ அறிந்தாயா! அடகில் சில நிலங்களும், விளையாது கட்டையாகச் சில நிலங்களும் இருக்கின்றன. அவற்றில் உனக்குப் பாகமாக எதைக் கொடுப்பது. அதை வைத்துக்கொண்டு நீ என்ன செய்வாய்? உன்னை இந்த கஷ்டங்களுக்கு இலக்காகச் செய்யக்கூடா தென்று நான் எண்ணுவதெல்லாம் உனக்கு எமனாகத் தோன்றுகிறதா!

நாங்கள் காலையில் புசித்தால் மாலையில் சாப்பாட்டுக்கின்றி தவிப்பது கடவுளுக்குத்தான் தெரியும். பூமிதேவிக்கு ஒப்பாகிய உன் தாயும் அண்ணியும் தாலியின் கீழுள்ள குண்டையும் கொடுத்துவிட்டார்கள். குடும்பக் கஷ்டங் தெரியாமல் இவ்விதம் தலை துள்ளுவது உனது நற்காலத்திற்கில்லை. இதை இப்போது அறியாவிடினும் ஒரு காலத்தில் கட்டாயம் அறிவாய்: பெற்றோரையும் உடன் பிறந்தோரையும் பகைத்துக்கொண்ட எவனுக்கும் உலகத்தில் க்ஷேமம் கிடையாது என்பது தேவ வாக்கு என்றதை மறக்காதே! மணி! வீணாகத் தலை தெறிக்க துள்ளாதே! உன் தாயார் சதா கண்ணீர் வடித்த வண்ண மிருக்கிறாள். அவளை கலங்கச் செய்யாதே! உன் பெற்றோரும் உடன் பிறந்தோரும் உனக்கு நன்மையைத் தேடுவார்களே யன்றி வழியில் போகிற குடி கலைக்கும் கொள்ளிக் கட்டைகள் உனக்கு என்றும் உதவ மாட்டார்கள். நீ பணம்; பணம்; என்று அன்று உன் தாயிடம் கூறினையாம்.

பணத்தினுல் நீ எதையும் அடைந்துவிடலாம் என்கிற ஓர் குருட்டு நம்பிக்கையை அறவே ஒழித்து விடு. பணத்தினுல் பெற முடியாத அரிய வஸ்துக்களும் உலகிலிருக்கின்றன. ஜாக் ரதை! அவற்றை இழக்காதே.

இங்ஙனம் உன் பிதா:
தர்மலிங்கம்.''

கடிதத்தைப் படிப்பதற்கே மணியனுக்கு மனம் பிடிக்கவில்லை. இருப்பினும் பல்லைக் கடித்துக்கொண்டு படித்தான். கோபம் மிஞ்சியது. "ஹாஹ்ஹா! கிழப்பாடைக்குப் பொழுது போகவில்லைபோலிருக்கிறது. இந்த புடலங்காய் புராணத்தை எழுதிவிட்டது. தரித்திரக் குப்பையை விட்டு நான் விலகியது என் புண்ணியமல்லவா? என் சுகத்தைக் கோராதவர்கள், தாயாம், தகப்பனும், அண்ணனும், அண்ணியாம்! சீச்சி! பிச்சைக்காரக் கழுதைகள், பொருக்கிகள்'' என்று கண்டபடி திட்டியவாறு கடிதத்தைச் சுருட்டி எறிந்தான். அவன் வெள்ளைக்கார நடையுடை பாவனைகளைக் கடைபிடிக்கும் பெரிய துரையாகையினுல் அன்று நடந்த அச்சம்பவத்தைத் தன் டைரியில் எழுதி வைத்தான். அதற்குப் பதில் எழுத அவன் சற்றும் விரும்பவில்லை. பின்னர் அதைப்பற்றி நினைக்கவே இல்லை.

சில பெரிய மனிதர்களை எல்லாம் சந்தித்து அவர்களைக் காக்காய் பிடித்து அவர்களின் சிநேகத்தைச் சம்பாதித்துக்கொண்டான். ஒரு பெரிய மனிதன் ஏதேனும் எலக்‌ஷனுக்கு நிற்கிறுன் என்பது தெரிந்தால் மணி அங்கு முதன்மை ஸ்தானத்தில் நின்று அதற்காக அலைந்து திரிந்து பாடுபட்டு, ஓட்டர்களின் வீட்டிற்கு நடையாக நடந்து, சாமர்த்தியமாகப் பேசி எலக்‌ஷனுக்கு நின்றவருக்கு ஜெயத்தை யுண்டாக்கி விடுவான். மணியனுக்குப் பணத் தேவதைமீது பக்தி பிறந்த நாள் முதலாய் வாக்கு சாமர்த்தியமும் சாதுர்யமாகப் பேசும் திறமையும் உண்டாயிற்று. ஆதலால் எந்த இடத்திற்கும் முதலில் முந்திரிக் கொட்டையைப் போல உருண்டு சென்று விடுவான்.

இம்மாதிரியே பல பேர்களின் சிநேகத்தைப் பெற்றுவிட்டான். அவர்களின் வீட்டுப் பிள்ளைகளுக்குப் பாடங் கற்றுக்

கொடுக்க ஆரம்பித்தான். இவ்விதமே தினம் காலையில் இரண்டு வீட்டிலும் மாலையில் இரண்டு வீட்டிலுமாக நான்கு வீடுகளில் பாடங்கள் கற்றுக்கொடுக்க அமர்ந்ததால் மாதம் 50 ரூபாய்க்கு மேல் சம்பளம் வருமானம் ஏற்பட்டுவிட்டது. இதைத் தவிர அவர்களிடம் கை கட்டி வாய் புதைத்து அவர்களின் முக்யமான வேலைகளைச் செய்து சன்மானம் பெறுவது, அவர்களோடு வேலைக்கு அலைவது; இவ்விதமே சில முக்யமான பெரிய மனிதர்களின் பிரியத்தை நன்கு சம்பாதித்துவிட்டான்.

துரைராஜா என்கிற கனவான் வீட்டில் அவருடைய புதல்விக்குப் பாடங்கள் கற்றுக்கொடுக்க அமர்ந்தான். இயற்கையில் மணியன் பார்ப்பதற்கு கம்பீரமும், முகத்தில் ஓர் கவர்ச்சித்தன்மையும் பொருந்தியவனுயிருந்தான். வெகு சிரத்தையுடனும் தவருமலும் பாடம் சொல்லிக்கொடுத்துக்கொண்டு வந்தான். அவனுடைய இருதயத்தில் ஒரே ஒரு எண்ணந்தான் வேலை செய்துகொண்டிருந்தது. அது எது? தான் எப்போது பெரிய பணக்காரனுவது, திவான் பகதூர் பட்டம் பெற்று பத்து பெயருக்குத் தலைவனும் மரியாதையாயும் இருக்கப்போகிறேம் என்ற எண்ணமேதான்! பணம்! பணம்! என்ற வாய்ப் பிதற்றலைத் தவிர வேறு கிடையாது.

இதே சிந்தனையோடு பி. ஏ. பாஸ் செய்துவிட்டான். புதல்வி சகுந்தலாவுக்கு மணி பாடம் கற்றுக்கொடுக்கும் பயனுல் சகுந்தலா முதல் தரமாகப் பாஸ் பண்ண வாரம்பித்தாள். அவளுக்கு சுமார் இரண்டு வருட காலமாக மணி பாடம் சொல்லிக் கொடுக்கும் அனுபவத்தில் சகுந்தலைக்கு மணியினிடத்தில் அத்யந்த மதிப்பும், ப்ரீதியும் நாளடையில் தாமாகவே சுரந்துகொண்டே வந்தன. சகுந்தலை முதல் தரமாக பாஸ் செய்தபோதெல்லாம் அவள் பிதா மணியனுக்குச் சன்மானங்கள் கொடுத்து வந்தார்.

சகுந்தலைக்கு வயது 16 இருக்கும். மணியனுக்கு 20 வயதாகிறது. இயற்கை உணர்ச்சியுடன் சகுந்தலை தன் மனப்பூர்வமாக மணியனைக் காதலிக்கலானுள். மணியனுக்கும் சகுந்தலையிடத்தில் அத்யந்த ப்ரீதி யுண்டாயிற்று; எனினும் அவனுடைய உண்மை

யான காதல் முற்றும் பணத்தின்மீது இருப்பதால் அவன் அதி லேயே லயித்திருந்தான். ஆதலால் அவனுக்குக் காதல் என்பதே விளங்காது அவளிடத்து சாதாரண ப்ரீதியே செலுத்தி இருந்தான். ஆனல் தன்னை சகுந்தலா முழு மனத்துடன் காதலிப்பதைத் தெரிந்துகொண்டான்.

இவர்களின் காதல் சில நாளைக்குள் விருத்தியாயிற்று. சகுந் தலா மணியையே விவாகம் செய்துகொள்வதென்று தீர்மானித் தாள். மணியுடன் பேசுவதும் பழகுவதும் அவளுக்குப் பேரானந்த மாக விருந்தது. ஒரு தினம் மணியைப் பாராவிட்டால் அவளுக்கு உயிரே போய்விடும்போ லாய்விடும் சதா அவன் நினைவாகவே இருப்பாள். தன்னுடைய மனத்தில் உள்ள எண்ணத்தை வார்த்தை மேல் மணியினிடத்தில் கூறவும் எண்ணினள்.

ஒரு தினம் மணியும் சகுந்தலாவும் அவள் பெற்றோருடன் ஏதோ ஷாப்புக்குச் சென்றார்கள். அங்கு ஓர் நீலக் கல் புதைத்த அழகிய மோதிரம் ஒன்று இருந்தது. அதை மணியன் தன் சொந்த பணத்தில் வாங்கி சகுந்தலைக்குக் கொடுத்தான். அதைப் பெற்ற சகுந்தலை வெகு சந்தோஷத்துடன் அதை ஏற்றுக்கொண்டாள். தான் காதலிப்பதற்குத் தக்கபடி அவனும் தன்னைக் காதலித்திருக் கிறன்; அதற்கு அறிகுறி இதுவே என்று தீர்மானித்து அளப்பரிய ஆனந்தமடைந்தாள்.

மணியோடு பேசும்போதெல்லாம் தான் அவன் மீது கொண் டுள்ள ஆழமான காதலைத் தெரிவித்துப் பேசுவாள். மணியும் அப் படியே தானும் அவளை விரும்புவதாயும் பின்னும் சில காலங்கழித் துத் தாம் மணப்பதென்றும் இருவரும் கூறிக் களிப்பார்கள். இந் நிலைமையிலிருக்கையில்தான் மணியனுக்கு B. A. பாஸாகிவிட் டது. அவன் சில பெரிய மனிதரின் உதவியால் மாதம் 60 ரூபாய் சம்பளத்தில் ஓர் உத்யோகத்தில் அமர்ந்தான்.

மணிக்கு இதற்கிடையில் கிண்டி குதிரைப் பந்தயப் பயித்தி யம் பலமாகப் பிடித்துக்கொண்டது. சில நண்பர்களின் உபதேசத்தி ஞல் மாதா மாதம் பணத்தைக் கட்டி ஏமாந்துகொண்டே சுமார்

500 ரூபாய் வரையில் தோற்றுவிட்டான். எனினும் அவனுடைய பேராசை மட்டும் நிற்கவில்லை. ஒரே அடியாக 300 ரூபாய் ஒரு குதிரையின்மேல் கட்டினான்:

எல்லோருமே உலகத்தில் என்றும் அதிர்ஷ்டஹீனர்களாயும், அதிர்ஷ்டசாலிகளாயும் இருந்துவிட முடியாது. மாறி மாறி இரண்டும் சுற்றிக்கொண்டே இருப்பது உலகவியல்பல்லவா! மணியனுக்கு லக்ஷ்மியின் கடாக்ஷம் பரிபூர்ணமாக ப்ரசன்னமாகும் வேளை நெருங்கிவிட்டது. 300 ரூபாய் கட்டிய குதிரை முதலில் ஜெயித்தது. முதல் பரிசாக அவனுக்கு 50 ஆயிரம் ரூபாய் ஒரே அடியாக வந்துவிட்டது. அவனுடைய ப்ரார்த்தனையும், வேண்டுகோளும், சபதமும் தம்தம் பலனைக் கொடுக்க வாரம்பித்தன. அவன் மனச் சந்தோஷத்தைக் கூறவேண்டுமா; இதை வெளியில் விடவில்லை. அப்போதும் "இந்த தொகை எம்மட்டும்? இன்னும் நமக்கு இதைப்போல பத்து பங்கு செல்வம் சேரவேண்டும்" என்று ஆவல் கொண்டான். அதிலேயே மனத்தை லயிக்கச் செய்திருந்தான்.

மணிக்குத் தெரிந்தவர்களில் ஒரு கனவானின் வீட்டில் ஏதோ விசேஷத்தை ஒட்டி விருந்து நடந்தது. அந்த கனவான் கிண்டி குதிரைப் பந்தயத்தின் மூலம் மணிக்குத் தெரியுமாதலால் அவர் அவனுக்கு அழைப்புப் பத்திரம் அனுப்பி இருந்தார்.

மணியன் தன் கையில் கொஞ்சம் பண நடமாட்டம் அதிகமாக ஆரம்பித்த அப்போதே தனி அறை வாடகைக்கு வைத்திருந்ததை விட்டு விட்டு ஓர் தனிப் பங்களாவை அமர்த்திக்கொண்டான். சமையல்காரன், வேலைக்காரர்கள் முதலிய பிருதுகளெல்லாம் உண்டாயின. ஒரு பேபி ஆஸ்டின் கார் விலைக்கு வாங்கித் தானே ஓட்டப் பழகிக்கொண்டு அட்டகாஸமானான். தனதேவதையை இன்னும் வணங்கிக் கை யெடுத்துக் கும்பிட்டுத் தன்னை பணத்தினாலே மூடி விடும்படியான கிருபை செய்யவேண்டுமென்று வேண்டுவான்.

அவனுடைய சாமர்த்தியமும், தசாநாதன் பிரவேச வேளையும் ஒன்றுகூடி விட்டதால் சில வருடத்தில் மணியனுக்கு அந்த ஆபீஸிலேயே பெரிய உத்யோகமாகிவிட்டது. மாதம் படிப்படியாக

உயர்ந்து 250 ரூபாய் சம்பளமாகிவிட்டது. மணியின் சூக்ஷ்ம புத்தியால் வியாபார தந்திர மனைத்தையும் நொடியில் கற்றுக்கொண்டு தினே தினே பெரிய மனிதனுகிக்கொண்டே வருகிறுன்.

இச்சமயத்தில் தான் விருந்துக்கு அழைப்புப் பத்திரம் வந்தது. மணி தன்னை யோர் லக்ஷாதிபதி போன்று அலங்கரித்துக் கொண்டு வெகு கம்பீரமாயும், படாடோபமாயும் விருந்துக்குச் சென்றுன். விருந்து நடத்தும் வேலுசாமி என்பவர் மிக மிக நாகரிகம் பொருந்தியவர். "நாம் ஏன் இந்த பாழும் இந்தியாவில் பிறந்தோம். வெள்ளைக்காரர்களாகவே ஏன் பிறந்திருக்கலாகாது?" என்று பலகாலும் சிந்திப்பார். அவருடைய ஆவல் தீர தமது குடும்பத்துடன் வெள்ளையர்களின் நடையுடை பாவனையையே முற்றும் கைக்கொண்டு ஒழுகி வருகிறுர்.

அவருக்கு வெகு புத்திசாலியாயும் வெகு அழகாயும் ஒரு புதல்வியுண்டு. அவருக்கு அவள் ஏக புதல்வி. அவளுடைய பாட்டியார் தம் குல தேவதையின் பெயராகிய ஜானகி என்று நாமம் சூட்டிவிட்டாள். வேலுசாமியின் நாகரிக முதிர்ச்சியினுல் அவர் தன்னுடைய பெயரை மிஸ்டர் வில்ஸன் என்றும், ஜானகியின் பெயரை மிஸ் ஜான் என்றும் சுருக்கிக் கொண்டார். அவருடைய மகளின் 13வது வயதில் அவரது மனைவி இறந்துவிட்டாள். தன் மகளின் நலனைக் கோரி அவர் மணம் செய்துகொள்ளவில்லை. அவர் புத்திரியை கவனிப்பதும், ஏராளமான பொருள் சேர்ப்பதும் இதுவே நினைவாக இருந்தார். மிஸ் ஜானுக்கு அன்று பதினெட்டாவது பிறந்த நாளாகையினுல் பெரிய விருந்து நடத்தினுர்.

வெள்ளையர்களின் பழக்கம்போல மிஸ் ஜான் வெகு சோபிதமாக அலங்காரம் செய்துகொண்டு காண்போர் மனத்தைக் காந்தம் போலக் கவரும் தன்மை பொருந்திய தருணியாக நின்று, வருபவர்களை எல்லாம் கை குலுக்கி அவரவர்களின் ஆசனத்தில் அமரச் செய்து மரியாதை செய்தாள். நமது மணியும் அங்கு வந்தான். அவனையும் கை குலுக்கி உட்காரச் செய்தாள். அங்கு வந்துள்ள சகலருக்கும் மரியாதை செய்து உட்காரச் செய்த பிறகு விருந்து

நடக்கத் தொடங்கியது. அதன் பிறகு ஆடல், பாடல் முதலியன நடந்தன.

நமது மணியனுக்கு இங்கு நடக்கும் விருந்தைக் கண்டு அபாரமான ஆவல் உண்டாகியது. "நானும் இத்தகைய குபேரனுக் கொப்பான செல்வவந்தனுகி, அரண்மனைக் கொப்பான மாளிகைக் கதிபதியாகி, இத்தகைய விருந்து நடத்துவோமா!" என்ற ஏக்கம் பிடித்துக்கொண்டது. அந்த விமரிசையிலேயே லயித்திருந்தான். எந்த பெரிய பெரிய மனிதன் எப்படி உடையணிந்திருக்கிருன் என்றதைப் பார்த்து குறிப்பு வைத்துக்கொண்டான். ஜான் செய்யும் மரியாதையும், பேசும் சமத்காரமும் எல்லோரையும் பிரமிக்கச் செய்தன.

அன்று விருந்து நடந்த பிறகு எல்லோரும் விடை பெற்றுக் கொண்டு சென்ருர்கள். மணியும் விடை பெற்றுக்கொண்டான். அடிக்கடி இங்கு வரவேண்டுமென்றும் சினேகிதராக இருக்கவேண்டுமென்றும் மிஸ்டர் வில்ஸன் கேட்டுக்கொண்டார். ஜானும் அப்படியே கூறினுள். பிறகு மணி வீடு வந்து சேர்ந்தான். தான் எப்படி பாடு பட்டுச் சம்பாதித்தால் இம்மாதிரி பெரிய பணக்காரனுகலாம் என்று யோசிக்கத் தொடங்கினுன்.

பிறகு பெரிய சபைகள், ஓட்டல்கள் முதலிய இடங்களில் வில்ஸனையும் ஜானையும் மணி சந்தித்தான். மணியனை ஜான் முதல் நாள் பார்த்தபோதிலிருந்து அவள் மனத்தில் ஒரு மாறுதல் உண்டாயது. பிறகு அடிக்கடி பல இடங்களில் சந்தித்துப் பேசுவதும் அவனை வீட்டிற்கு அழைப்பதுமாக விருந்தாள். மணியிடத்தில் அந்தரங்கமான பிரியம் உதித்தது.

மணி பெரிய மனிதனுகிய பிறகு சகுந்தலாவுக்குப் பாடம் கற்றுக்கொடுப்பதை நிறுத்திவிட்டான். எனினும் சகுந்தலா உண்மையான காதல் மணியினிடத்தில் கொண்டிருந்ததால் எப்படியாவது இருவரும் சந்தித்து வந்தார்கள்.

மணியும் சகுந்தலாவிடம் அத்யந்த ப்ரீதி வைத்து அவளைத் தான் மணப்பதாக வாக்கும் கொடுத்திருக்கிறான். ஆதலால் அடிக்கடி கடற்கரையில் அவளைச் சந்தித்துப் பேசுவான். சகுந்தலா மணியைப் பூர்ணமாக நம்பி இருந்தாள். மணியனுக்கு ஜானுடைய சிநேகம் கிடைத்த பிறகு ஸ்திர புத்தி யற்றத் தன்மையினாலும், பண தேவதையின் அடிமைத்தனத்தினாலும் மனம் மாறிவிட்டது. ஜான் தன்னை நிரம்பவும் காதலிக்கிறாள் என்பதை அவன் நன்கு தெரிந்து கொண்டான். அவளிடம் இவனுக்கும் அன்பு உண்டாகியது. ஆனால் அது உண்மையான தெய்வீகத் தன்மையோடு கூடிய காதலா!...இல்லை ; இல்லை. என்றே கூறவேண்டும்.

ஜான் ஒரே புதல்வி. வில்ஸனுடைய ஏராளமான சொத்திற்கும், வியாபாரத்திற்கும் அவளே அதிபதி. அவளை மணந்தால் தான கட்டாயம் குபேரனாகி விடலாம் என்ற எண்ணம் தலை தூக்கி நின்றது. ஆதலால் காரியத்தை உத்தேசித்து ஜானிடத்தில் அபாரமாகக் காதல் உண்டாகி விட்டவன்போல நடித்து அவளிடம் அதிக பழக்கம் வைத்துக் கொண்டான்.

ஓர் தினம் அவன் தன்னறையில் உட்கார்ந்து ஆழ்ந்த யோசனை செய்து கொண்டிருந்தான். ஆதியில் தான் இருந்த அல்பமான ஏழ்மைத்தனத்தின் அலங்கோலத்தையும், இப்போது தான் இருக்கும் பெரிய பதவியையும் எண்ணி, எண்ணிப் பூரித்தான். தன்னையே நம்பி இருக்கும் சகுந்தலைக்குத் தன் எண்ணத்தை வெளியிட்டு விடத் தீர்மானித்தான்......“ ஐயோ ! பாவம்! அவள் நம்மை நம்பியதற்கு நாம் கை விடுவது தர்மமா ? சிச்சீ ! இது தர்மமல்ல..... ....இதென்ன கர்னடக எண்ணம்! அவளை மணந்தால் நான் குபேரனாவது எப்படி? அவளை திரஸ்கரிக்க வேண்டியதுதான். என்னுடைய சுகத்திற்கும் ஆநந்தத்திற்கும் மிஞ்சியா நான் நடப்பது? ஜானை மணப்பதால் பலவித நன்மைகளை அடையலாம். அவளுடைய பிதா பெரிய வியாபாரி. அதிலேயே நாமும் ஓர் பாகம் எடுத்துக் கொண்டு பெரிய கோடீச்வரனாகி விடலாம். ஆம் ; இதுவேதான் கடைசித் தீர்மானம்'' என்று பலமாக யோசித்துக் கொண்டிருக்கையில்,

அவ்வறைக் கதவைத் திறந்துகொண்டு சகுந்தலா உள்ளே நுழைந்தாள். மணியனுக்கு ரோஜா புஷ்பத்தில் அதிக பற்றுதல் உண்டு. அவனுக்கு மிகவும் பிடித்தமான ரோஜா புஷ்பத்தை அழகிய செண்டாகக் கட்டி எடுத்துக்கொண்டு வெகு சந்தோஷத்துடன் உள்ளே வந்தாள். மணி அவள் வருவதைக் கண்டு மிக்க வெறுப்பும், சீற்றமுங் கொண்டு "யாரது? என்னனுமதியின்றி கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தது?" என்று அதட்டினன்.

திடுக்கென உரைத்த இவ் வார்த்தையைக் கேட்ட சகுந்தலை அப்படியே நடுக்கலுற்ருள். எனினும் தன்னை இன்னுரென்று அறியாது வேறு யாரோ என்று எண்ணிச் சொல்லி விட்டார் என்று தன்னையே தான் சமாதானம் செய்துகொண்டு "யாருமில்லை மைடியர்! நான்தான் உங்கள் கா..." என்று முடிப்பதற்குள், மணி "ஓகோ! கா...என்பதன் பொருள் தெரியும். காதலி என்று இனி கூற வேண்டாம்; நீ என் காதலியல்ல." என்ருன்.

இடி முழக்கங் கேட்ட நாகம்போல பதறிப்போய் நடுக்க முற்ற சகுந்தலா "ஹா!....என்ன! நான் தங்கள் காதலி இல்லையா! ஐயோ! இதென்ன தாங்கள் உண்மையாகக் கூறும் வார்த்தையா! நான் தங்கள் அடிமையல்லவா! என்னுருயிர் பிராணகாந்தர் தாங்களன்ருே! இதென்ன இவ்விதம் மாருட்டமாகக் கூறி என்னை விளையாட்டுக் காட்டுகிறீர்களா? வேண்டாம். என் இன்ப மணியே! இதோ உங்களுக்கு மிக்க பிரியமான ரோஜா புஷ்பம் கொண்டு வந்தேன். எடுத்துக் கொள்ளுங்கள்" என்று அவன் முன்பு நீட்டினுள்.

மணி:—சகுந்தலா! நான் விளையாடவில்லை; உண்மையில் நான் கூறுகிறேன். நீ என் காதலியுமில்லை, நான் உன் காதலனுமில்லை. நீ உடனே வெளியே போய்விடு.—என்று கூறியவாறு அவள் கொடுத்த ரோஜா புஷ்பத்தைக் கீழே பிச்சி எறிந்தான்.

சகுந்:—(அபாரமான அதிர்ச்சி யடைந்து) ஐயோ! என்னுயிர் தத்தளிக்கின்றதே! என்ன செய்வேன்? தாங்கள் என்னை மணப்பதாக வாக்களித்து இதுகாறும் பிரியமாக விருந்ததெல்லாம் வெறும் வேஷமா! தாங்கள் என்னைக் காதலிக்க வில்லையா! என்னை மோசமா

செய்து விட்டீர்கள்? ஐயோ! நான் தங்கள் நிழல்போல வாழ்க்கை நடத்தவும், சிக்கனமாகக் குடும்பம் நடத்தவும் காத்திருக்கிறேனே! நான் அனுவசியமாகச் செலவு செய்ய மாட்டேன். தங்கள் மனங் கோணுமல் நடக்கிறேன். எதற்காகத் தாங்கள் என்னைத் திடீரென்று வெறுக்கிறீர்கள்?

மணி:—பெண்ணே! நீ இந்த வீண் கேள்விகளெல்லாம் கேட்க வேண்டாம்; நான் உன்னை சாதாரணமாக நேசித்தது உண்மை; ஆனுல் காதல் கொள்ளவில்லை. நான் பணத்தினிடத்தில்தான் காதல் கொண்டிருக்கிறேனே யல்லாது எனக்கு வேறு எந்த பொருளும் ஈடல்ல. ஏழ்மையான வாழ்க்கையை, சிக்கனத்தை நான் விரும்ப வில்லை. சாதாரண வீட்டுப் பெண்ணுகிய உன்னை நான் விரும்ப வில்லை. எனக்கு லக்ஷாதிபதியின் பெண்ணும், குபேர சம்பத்தில் மூழ்கிக் கிடப்பதுந்தான் பிரதானம். என்னையே நான் பணத்தினுல் மூடி வைக்க வேண்டும். பணம் ஒன்றுதான் என் வாழ்நாளின் துணைக்கருவி.

சகுந்:—ஆகா! மோசம்! மோசம்!! என்னை வேண்டுமென்று ஏமாற்றி மோசம் செய்துப் படுகுழியில் தள்ளிவிட்டீர்கள். ஐயோ! நான் தங்களையே நம்பி சகலத்தையும் மறந்தேனே! உண்மையான காதலுக்கு முன்பு எதுதான் உபயோகமாகும்? பணம்: பணம்: என்று கூறி என்னைப் புண்படச் செய்கிறீர்களே: பணத்தால் நீங்கள் சகலமும் உலகத்தில் அடைந்துவிடலாம் என்று எண்ணுகிறீர்களா! பணத்திற்கே நீங்கள் அடிமையாக எண்ணுவதால் சகல சுகமும், சகல சாம்ராஜ்யமும் அடைந்து சந்தோஷப்படலாம் என்று எண்ணுகிறீர்களா?

மணி:—கட்டாயமாக எண்ணுகிறேன். பணத்தினுல் ஆகாத காரியமும், அடையாத சுகமும், பெருத இன்பமும் வேறு என்ன இருக்கிறது? ஆமாம்: பணந்தான் என் நம்பிக்கைத் தெய்வம்: பணந்தான் என்னுயிர் நிலை, பணந்தான் சகலமும்.

சகுந்:—ஆஹா! அத்தகைய உறுதி வேண்டாம். பணத்தினுல் நீங்கள் பெற முடியாத பொருள்கள், மனத்தினுலும் நினைக்க முடியாத

பொருள்கள் சில இருக்கின்றன. அவைகளைப் பணங் கொடுத்து வாங்கமுடியாது என்பது மட்டும் ஞாபகம் இருக்கட்டும்.

மணி:—ஓ! இந்த வீண் லெக்சர் இங்கு வேண்டாம்: என் தீர்மானத்தின் முடிவு என்னைச் சேர்ந்தது. கட்டாயம் நான் உன்னைக் கலியாணம் செய்துகொள்ள முடியாது. உன்னை விடப் பன்மடங்கு அதிகரித்த அழகுடனும், ஆயிரம் பங்கு செல்வத்தில் சிறந்த சீமாட்டியாயும் உள்ள ஓர் வனிதையை நான் அடைந்துள்ளேன்; அது எதனுல் கிடைத்தது தெரியுமா. பணத்தினுல்தான். நீ எனக்கு தத்வம் போதிக்கவேண்டாம்; இனி நீ என்னை மறந்துவிட்டு இவ்விடத்திலிருந்து சென்று விடு—என்ருன்.

இதைக் கேட்ட சகுந்தலையின் துக்கம் கரை புரண்டது. "ஐயோ! பெரியோருக்கு கொடுக்கவேண்டிய அதிகாரத்தை நாமே எடுத்துக்கொண்டு வரன் நிச்சயித்ததற்குப் பலன் இதுவா! ஹா! நாதா! என் காதலா! என்னைத் தாங்கள் வெறுத்துத் தள்ளி அன்னிய மாதை மணந்தாலும் மணந்துகொள்ளுங்கள். ஆனுல் நான் என்னவோ என் தீர்மானத்திலிருந்து பிறழமாட்டேன்: தாங்கள் இந்த நிமிடம் பணத்தின் பாதத்திற்கு அடிமையாகி இருப்பினும் பணத்தினுல் பெற முடியாத; சில அபூர்வ பொருள்கள் இருக்கின்றன் என்பதைக் கடவுள் உங்களுக்குச் சீக்கிரத்திலேயே காட்டவேண்டுமென்று நான் அவரை வேண்டுகிறேன்......ஆ! நாதா! நான் நிராகரிக்கப்பட்டவள்தானு! இனி என் ஜென்மம் வியர்த்தமாகிவிட்டதா! என்னைக் கைவிட்டு விட்டீர்களா! ஐயோ! நான் மாட்டேன்: தங்களை விட்டுப் போகமாட்டேன். தங்கள் வீட்டில் வேலைக்காரியாகவேனு மிருந்து உயிர் துறப்பேனே யல்லாது நான் போகமாட்டேன்: என்னைத் தள்ளாதீர்கள்" என்று கல்லும் கரைந்து உருகும்படியாகக் கூறியவாறு அவனிரு கைகளையும் பிடித்துக்கொண்டாள்.

சகுந்தலாவின் இரு விழிகளிலும் நீர் முத்துக்கள் உருண்டு புரண்டு மணியின் கரத்தின்மீது விழுந்து 'சகுந்தலாவின் இருதயம் இவ்விதந் தான் உடைந்துவிட்டது' என்று கூறுவதுபோல உடைதன. கல்லினும் கொடிய நெஞ்சமுடைய மணி என்ன செய்தான்!

"ஐயோ! பாவம்! பேதைப் பெண் உண்மையான நம்பிக்கையுடன் நம்மீது உயிரையே வைத்துவிட்டாள்: உம்... எது எப்படியாயினும் எனக்கு முக்கியம் பணந்தான். இப்போது மனது இளகிடக் கூடாது" என்று தனக்குள் எண்ணி "சகுந்தலா! நீ என்மீது காதல் கொண்டு நம்பியது உன் குற்றம். ஏதோ நானும் மணக்கலா மென்று தான் எண்ணினேன். இப்போது என் மனம் மாறிவிட்டது. நீ என்னை வீணே பலாத்காரம் செய்வதில் உபயோகமில்லை. ஒருதலைக் காதலால் யாது பயன்? விலகிப் போய்விடு" என்று கூறி அவள் பிடியிலிருந்து விலகிக்கொண்டான்.

சகுந்த:—ஆ! உங்கள் ஹ்ருதயத்தில் காதல் என்பதே கிடையாதா! கருணை என்பதே இல்லையா! கல்லினும் கொடியதா தங்கள் ஹ்ருதயம்?

மணி:—என்னுடைய் நேரத்தை எல்லாம் பாழ்ப் படுத்திக் கொண்டு வீண் பேச்சு வேண்டாம். என்னுடைய காதல் முற்றும் பணத்தின்மீது தான் இருக்கிறது. எனக்குப் பணந்தான் காதலி: இன்ப நிலயம் பணந்தான். சகலமும் பணந்தான். உம். நீ போய் வரலாம்.

சகுந்:—உம்: இப்போது மாலை நேரம். இது இப்படியே நிற்காது. அடுத்தார்ப்போலப் பயங்கரமான இருள் வரப்போகிறது. அதுபோல உன்னுடைய இந்த பணத்தின் மோகம் எத்தகையதென்று இப்பொழுது தெரியாது. பிறகு தெரிந்துகொள்வாய்; மணீ! பணத்தினுல் நீ பெற முடியாத அரிய பொருள்கள் இருப்பதை நீ அறியாமற் போகப் போவதில்லை.—என்று கூறிக்கொண்டே அவ்விடத்தை விட்டு மெல்ல கிளம்பினுள்.

கோபுரம்போன்று உயர்ந்து கொந்தளித்துக்கொண்டு பேராரவாரமாய் வந்த அலை கரையை எட்டிப் பிடிப்பதற்கு முன் உடைந்து போவதேபோல சகுந்தலாவின் கதி யாயிற்று. இருதயம் உடைந்து போய் தத்தளித்துத் தவித்தவாறு நடக்கலானுள். அவள் செல்வதை ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருக்கும் மணிய

னுடைய பசையற்ற ஹ்ருதயத்தில் இது ஓர் வேடிக்கையாகத் தோன்றியது; எனினும் மனத்தில் ஒரு வித கல்வரமும் உண்டாயிற்று.

"உம்; நமக்கும் சகுந்தலாவுக்கும் இருந்த பொருத்தங்கள்—பந்தங்கள்—இன்றோடு ஒழிந்து விட்டன. என் சரித்திரத்தில் இன்று இரண்டாவது அத்தியாயம் முடிந்தது. உண்மைக் காதலின் மகிமையை அறியாமையினால் மனம் இளகாது போயிற்று......இனி அந்த எண்ணங்கள் எதற்கு?" என்று தன் மனத்தையே தான் தேற்றிக் கொண்டு உட்கார்ந்தான். ஜானை மணப்பதற்கு என்ன சூழ்ச்சி செய்யலாம் என்று சிந்திக்க வாரம்பித்தான். பிறகு எழுந்து தன்னை உயரிய உடையால் அலங்கரித்துக்கொண்டு கடற் கரைக்குச் சென்றான்.

அவனுடைய மனத்தில் சகுந்தலாவின் கண்ணீர் வடிந்த முகம் திடீர் திடீர் என்று தோன்றிக்கொண்டே இருந்தது. அந்த தோற்றங்களை யொருவாறு மறந்து தன் மோட்டாரை நிறுத்தி விட்டு, இறங்கி கால் நடையாகச் சென்றான். அலைகளின் அழகிய ஆரவாரத்தின் அருமையைக் கண்ணுற்றவாறு ஜான் தன் கையில் நாயைப் பிடித்துக்கொண்டு நின்றிருந்தாள். "மை டியர் ஜான்!" என்று அழைத்தவாறு மணி அங்கு சென்றான்.

மணியின் வரவைக் கண்டு சந்தோஷத்தை யடைந்த ஜான் "ஓகோ! இப்போதுதான் உங்களை நினைத்தேன்; வாருங்கள்." என்றாள். இருவரும் மணற்பாங்கில் உட்கார்ந்து பேச வாரம்பித்தார்கள்.

ஜான்:—மை டியர்! நீங்கள் எங்கே வாராமலிருந்து விடுவீர்களோ என்று என் மனம் தத்தளித்தது. மணி! உன்னை நான் என் மனப் பூர்வமாக நேசிக்கிறேன்—உண்மையான காதல் கொள்கிறேன்—நாம் ஏன் இன்னும் மணம் செய்து கொள்ளாமல் இருக்க வேண்டும்? இதை நான் பல தடவைகளில் உங்களிடம் கேட்க எண்ணினேன்; தங்களை முற்று மறியாது எப்படிக் கேட்பது என்று

நானே மயங்கினேன். என் பிதா இதைப் பற்றி அடிக்கடி கேட்கிருர். இதைத் தீர்மானித்து விடுவது நலமென்று தோன்றியதால் கேட்கிறேன். என்ன சொல்கிருய்?" என்று கூறியவண்ணம் அவன் கையைப் பிடித்துக் கொண்டாள்.

தனலக்ஷ்மி தன்மீது முற்றும் கருணை மாரி பொழியத் தொடங்கி விட்டாள் என்று பணத்தின்மீது மோகம் அப்போது தோன்றியதேயன்றி உண்மைக் காதல் ஜானிடத்திலும் உண்டாக வில்லை. அவளை ஓர் கருவியாகக் கொண்டு தான் பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற ஒரே நோக்கந்தான் அவன் மனத்தில் ஆழமாகப் பதிந்து கிடந்தது. ஆதலால் அவன் தன் காரியம் ஜெயம் பெற்று விட்டதென்று சந்தோஷம் பொங்கியவனுய் "ஹா! ஜான்! என்னைப் பற்றி நான் கூறவேண்டுமா! நீ அறியமாட்டாயா! இந்த வார்த்தையை நான் என்று கேட்கப் போகிறேன் என்று எதிர் பார்த்திருந்தேன். உன்னைப் பற்றி நான் சந்தேகங் கொள்ளவில்லை. நீ என்னை உண்மையாகக் காதலிப்பதை என் மனமறியும். உன் பிதா எப்படியோ என்று சற்று அஞ்சினேன். சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி பொழிந்தது போலாய் விட்டது. நீ எப்படி தீர்மானிக்கின்ருயோ, அப்படியே நமது மணத்தை முடித்து விடுவோம்." என்று கூறியவாறு தன்னை ஜான் முற்றும் நம்பும்படி அவளுக்கோர் முத்தமளித்தான்.

காதலர்களின் களிப்பிற்கு எல்லை யுண்டா! ஜான் தன் மனமாற அவனை நம்பித் தன் உயிரையே கொடுத்தாள். இன்னும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்த பின்னர் இருவரும் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். மணியின் மனக் களிப்பு அபாரமாக மிஞ்சி விட்டது. அவன் ஆநந்தப் பெருக்கில் அகமகிழ்ந்து பூரித்தான். தன் விவாக தேதியை எதிர்பார்த்திருந்தான்.

மணியன் என்று பணத்தின்மீது மோகங் கொண்டு சபதம் செய்தானே அன்று முதல் இது வரையில் தன் குடும்பத்தினரை அறவே மறந்தான். அந்த எண்ணமே அவன் மனத்தில் உண்டாக வில்லை. தாயோ, தந்தையோ, அண்ணனே, தம்பியோ ஒரு விதமான

பற்றும் அற்று பணம்! பணம்! என்கிற உச்சரிப்பை ஜபமாகக் கொண்டிருந்தான். தான் ஒரு உருவத்தின் மூலம் உலகில் ஜெனித்தோம் என்பதை அடியோடு மறந்து நூதன மனிதனாய் விளங்கினான். அவன் பெற்றோர்கள் எழுதும் கடிதத்திற்குப் பதிலே கிடையாது. பின்னும் சில தினங்களில் அவன் பெற்றோரிடத்திலிருந்து கடிதம் வந்திருப்பது தெரிந்ததும், அதை அவர்களுக்கே திருப்பிவிட்டான். இதையறிந்த அவர்கள் கடிதம் எழுதுவதை நிறுத்திக் கொண்டார்கள்.

லக்ஷ்மியம்மாள் அதே கவலை கொண்டு மெலிந்து விட்டாள். சதா மணியைப் பற்றி நினைத்துப் புலம்புவாள். அவன் நன்றாகப் படித்தால் அவன் மூலம் தாங்கள் விருத்திக்கு வரலாம் என்ற நோக்கங்கொண்டு தமக்கிருந்த சொல்ப நிலங்களை விற்றும், அடகு வைத்தும் மணியனுக்குப் பணமனுப்பிப் படிக்கச் செய்து விட்டார்கள். இப்போது சாப்பாட்டிற்கும் தகராராகி விட்டது. மானம் பார்த்த நிலங்களை மானமும் பேயாது காய்ந்து ஏமாற்றி விட்டது.

பாலுவின் தகப்பனார் அந்த ஊரிலுள்ள திண்ணைப்பள்ளிக்கூடத்தில் உபாத்திமைத் தொழில் பூண்டார். அந்த கிராமத்து ஜனங்கள் சேர்ந்து உபாத்தியாயருக்கு மாதம் இத்தனை கலம் நெல் படி யளந்து விடுவார்களே யன்றி பட்டின வாசத்தைப் போலப் பணங் கொடுப்பதில்லை. அந்த நெல் எந்த மூலைக்கு? லக்ஷ்மியம்மாளும் சந்திராவும் சாணி எடுத்து விறட்டி தட்டி விற்பது. ஆல இலை பறித்துத் தைத்து விற்பது. ஒரு எருமை மாடு உண்டு அவர்களுக்கு. அந்த மாட்டிடம் காணும் பாலைத் தயிராக்கி மோரு, தயிரு, நெய் முதலியன பக்கத்துக் கிராமங்களுக்குக் கொண்டு விற்று விட்டு வருவது, இவ்விதமாக காலக்ஷேபம் செய்து வருகிறார்கள்.

மணியினுடைய தகவல் சில வருடங்களாக ஒன்றுமே தெரியவில்லையாதலால் அவன் உயிரோடு இருந்தும் உயிரற்றதுபோலவே தோன்றி விட்டது. பெற்றவர்களின் மனத்தைப் புண்படச் செய்யும் எந்த மனிதர்களும் அதன் பலனை அப்போது உணர்வதில்லை. பாலு தன் தாய் தந்தையர்கள் வயதாகி விட்டதால் அவர்களை அதிகமாக

வேலை செய்ய விடாமல் அவர்களின் வேலையைத் தானும் தன் மனை வியுமாகவே செய்ய வாரம்பித்தார்கள். நெய்யும், தயிரும் இரண்டு சட்டிகளில் தனித்தனியே சந்திரா ஒன்றும் தான் ஒன்றுமாக எடுத் துக்கொண்டு காலையில் இருட்டோடு அதைக் கொண்டு விற்பதற் குப் பக்கத்துக் கிராமங்களுக்குச் செல்வார்கள்.

வெகு இனிமையான அக் காலை வேளைகளில் மனமொத்த தம்பதிகளிருவரும் தேனும் பாலும்போல ஒற்றுமையுடன் புறப் பட்டு பேசிக் கொண்டே இயற்கை தேவதையின் அழகைப் பார்த்து ஆநந்தமடைந்து வழி நடக்கும் சிரமம் தெரியாது நடந்து சென்று தயிர், நெய் முதலியவற்றைப் போட்டு விட்டுப் பணம் வசூலாகு மிடத்தில் வாங்கிக் கொண்டு பிறகு கடைக்குச் சென்று சமைய லுக்கு வேண்டிய சாமான்களை வாங்கி எடுத்துக்கொண்டு மீண்டும் நடந்து 11-மணி சுமாருக்கு வீட்டுக்கு வருவார்கள்.

சில தினம் தயிர் விற்று விட்டு ஆலமரம் அடர்ந்த விடத்தில் சென்று இலைகளைப் பறித்துக் கோட்டை கட்டிக் கொண்டு வரு வார்கள். பின்னும் சில தினங்களில் பகலில் காயும் கடின வெய்யி லுக்கு ஒரு தோட்டத்தில் தங்கிவிட்டு வெய்யில் தாழ வீட்டிற்கு வருவார்கள். லக்ஷ்மியம்மாள் தம் மகனும் மருமகளும் காட்டும் அன்பால் பூரித்துப் போனாள். தினம் பானுவும் சந்திராவும் வரும் வரையில் தானும் சாப்பிடாமல் பட்டினியாக உட்கார்ந்திருப்பாள். வந்த பிறகே மூவரும் ஆநந்தமாகச் சாப்பிடுவார்கள்.

ஒரு தினம் பானுவும் சந்திராவும் தயிரும் நெய்யும் விற்று விட்டுக் கடையில் சாமான்கள் வாங்கிக்கொண்டிருந்தார்கள். அப் போது அங்கு தினசரிப் பத்திரிகையைச் சிலர் படித்துக் கொண் டிருந்தார்கள். அந்தப் பத்திரிகையை பானு கவனித்தான். அதில் பெரிய புகைப் படங்கள் இரண்டு காணப்பட்டன. அதில் மணி வெகு ஒய்யாரமாக உடை தரித்து அலங்கார புருஷனாகக் காணப் பட்டான். அவனைச் சுற்றி அனேகர் நின்றிருந்தார்கள். மணியன் கழுத்தில் மாலையும் கையில் பொக்கேயும் இருந்தன. படத்தின் கீழே

"மாக்ஷிமை தங்கிய ஜார்ஜ் சக்ரவர்த்தியாரின் பிறந்த தினக் கொண்டாட்டத்தின் போது ஸ்ரீமான் S. மணி அவர்களுக்கு ராவ் சாஹிப் பட்டம் அளிக்கப்பட்டது. அதற்காக அவரது அன்பர்களின் சந்தோஷக் கூட்டமும், டீ பார்ட்டியும் நடத்தியபோது எடுத்த படம். ஸ்ரீமான் மணி ஆதியில் பரம தரித்திரராயிருந்து இப்போது லக்ஷாதி பதியாகியதோடு அனேக கம்பெனிகளிலும், பாங்கிகளிலும் பங்குதார ராயும், அனேக சபைகளின் பிரஸிடெண்டாயும் விளங்குகிறார்."

என்று வரையப்பட்டிருந்தது. அதைப் படித்த பாலுவுக்கு ஆநந்தம் பொங்கி வழிந்தது. தன் சகோதரன் இத்தனை உயர்ந்த பட்டத்தில்—பதவியில், செல்வாக்கில்—இருப்பது பற்றி அவன் மனம் அளப்பரிய பூரிப்பை யடைந்ததெனினும் அவன் தன் பெற்றோரைக் களிப்பிக்காத காதகனுகி விட்டானே என்று சற்று விசனித்தான். தன் மகன் இத்தனை பெரிய கௌரவத்திலிருப்பதைக் கூடவிருந்து அனுபவித்தால் எத்தனை ஆநந்தமாக விருக்கும். அன்னையின் வயிறு எவ்வளவு களிப்படையும். தந்தையின் மனம் என்ன உற்சாகமடையும். ஆகா! பெற்றவர்கள்மீது பாசமற்ற கட்டையாகிய இவனுக்கு ஊரார்மீது அன்பாம்; ஆதரவாம்; அவர்களுக்கு உபகாரியாம். அவர்களைக் களிப்பிக்கிறுனும். என்ன வேடிக்கை!" என்று தனக்குள் எண்ணி விசனித்தான். அன்று தயிர் விற்ற காசில் ஒரு பத்திரிகை வாங்கினுன். அதைக்கொண்டு வந்து சந்திராவிடம் காட்டி "சந்திரா! இதோ பாரு. இந்த படத்திலிருப்பது யார்? உனக்குத் தெரிந்த மனிதனை பார்." என்று கூறிக்கொண்டே காட்டினுன்.

சந்திரா வெகு பரபரப்புடன் அதை வாங்கிப் பார்த்தாள். "நாதா! இது கொழுந்தனுருடையதுபோ லிருக்கிறதே! ஆமாம்; ஆமாம். இது நமது மணியுடையதுதான். ஆகா! என்ன ஆடம்பரம்! இவர்களை எல்லாம் ஏன் பேப்பரிலே போட்டிருக்கிறுர்கள்? என்ன விசேஷம்? இவர் கழுத்தில் மாலை போட்டிருக்கிறதே! கல்யாணமாய் விட்டதா! பெண்ணைக் காணவில்லையே! என்ன நாதா! சொல்லுங்கள்." என்று வெகு ஆத்திரத்துடன் கேட்டாள்.

பாலு:—கண்மணீ! ஏன் இத்தனை பரபரப்பு? கல்யாணம் ஆயிற்றோ இல்லையோ! அதெல்லாம் இதில் தெரியாது. இவனுக்கு ஏதோ ஒரு பட்டம் வந்திருக்கிறதாம். அதற்காக இந்த மரியாதையாம். இவனுடைய தோற்றத்தைப் பார்த்தால் அசல் வெள்ளைக்காரனைப் போலிருக்கிறது. பெரிய அந்தஸ்திற்கு வந்துவிட்டான் போலிருக்கிறது. உம்; எங்கேனும் நன்றாயிருக்கட்டும். இதை நம் பெற்றோருக்குக் காட்டுவதற்காகவே நான் வாங்கினேன். சரி; போகலாமா?—என்றான்.

சந்திராவும் வெகு சந்தோஷத்துடன் படத்தைப் பன்முறை பார்த்துவிட்டுச் சாமான்களை வாங்கிக்கொண்டு கிளம்பினாள். இருவரும் பேசிக்கொண்டே நடந்து 12 மணி சுமாருக்கு வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். பாலு அந்த பத்திரிகையை முதலில் தன் தாயாருக்குக் காட்டி "அம்மா! இதோ யார் பாரம்மா! தெரிகிறதா?" என்றான். புளிக்கொட்டை ஆய்ந்துகொண்டிருந்த லக்ஷ்மியம்மாள் "என்னடாப்பா அது. காந்தி சமாச்சாரமானா காட்டு. மற்றபடி வேடிக்கையானா எனக்கு வாண்டாம்! அந்த மகாத்மாவின் திவ்ய சரிதை எதுவானாலும் பார்க்கவும் கேட்கவும் ஆவலாயிருக்கிறது. யாரோ பந்தாடி ஜெலித்தார்கள். ஓட்டம் ஓடி ஜெலித்தார்கள். பாட்டுப்பாடி ஜெலித்தார்கள். இவை எவ்லாம் என்னத்திற்கு. மகாத்மா காந்தி என்ன செய்தார்! என்ன சொன்னார் எங்கெல்லாம் மீட்டிங்கு நடக்கிறது. கதர் விற்பனை எவ்விதமிருக்கிறது என்றதைக் கூறு" என்றாள்.

தாயாரின் தேச பக்தியைக் கண்டு மிக்க சந்தோஷித்த பாலு "அம்மா! அவைகளையும் கூறுகிறேன்! இதோ இந்த படத்தைப் பாரு! இதில் உனக்குத் தெரிந்தவர்கள் யாரேனுமிருக்கிறார்களா சொல்லு." என்று பத்திரிகையைப் பிரித்துக் காட்டினான். லக்ஷ்மியம்மாள் அதைப் பார்த்தாள். முதலில் தெரியவில்லை எனினும் உடனே தெரிந்துகொண்டாள். "ஆ! பாலூ! இவன் மணியனல்லவா! மணியன்தான். ஆமாம்! அடாடா! என்ன மாறுதல்! என் கண்ணான மணியா! உலகத்தில் நீ இருக்கிறாயோ இல்லையோ என்று நான் தவித்தேனே! சாவு வாழ்வுகூடத் தெரியாமல் எத்தனை வருட

மாக எங்களை விட்டு மறைந்துவிட்டாய்! நீ உயிரோடு இருப்பதை இப்பத்திரிகையாவது தெரிவித்ததே! அதுவே போதும். இதென்னடா கூட்டம்! பாலு இவன் ஆங்கிலேயருடன் சேர்ந்துவிட்டான் போலவிருக்கிறதடா! அசல் வெள்ளைக்காரன்போலவிருக்கிறதே! இவனுக்கு மாலை எதற்குப் போட்டிருக்கிறது. கல்யாணமா!... பெண்களைக் காணவில்லையே!'' என்று சந்திரா கேட்டதுபோலவே கேட்டாள்.

பாலு:—அம்மா! இவன் எந்த மதத்தில் சேர்ந்துவிட்டானே அது தெரியாது. இவனுக்கு ஏதோ ஒரு பட்டம் வந்ததாம்! இவன் பெரிய அந்தஸ்து பெற்று சீமானுகிவிட்டான். அதற்காக விருந்து நடந்ததாம். கல்யாணமில்லை. நீ சதா மணி இருக்கிறனே இறந்துவிட்டானே என்று கவலைப் பட்டுக்கொண் டிருந்தாயே! அதனல் இந்த படத்தையேனும் பார்க்கட்டும் என்று வாங்கி வந்தேன்.

லக்ஷ்மி:—ஏண்டா! இவன் எந்த ஊரிலிருக்கிறன்? அதை இந்தப் பத்திரிகையில் போடவில்லையா! குழந்தை குட்டிகள் இருக்கிறதா! அதுவும் போடவில்லையா!...இதை அப்பாவுக்குக் காட்டுடா!—என்றாள்.

அப்போது தர்மலிங்கம் அங்கு வந்ததால் லக்ஷ்மியம்மாளே அதை நேரில் கொண்டு போய் "என்ன! இதோ பார்த்தீர்களா! குழந்தை மணியன் என்ன வைபவத்தி லிருக்கிறன்! அவனுக்கு பெரிய பதவியும் பட்டமும் கிடைத்திருக்கிறதாம். என்ன அதிர்ஷ்டம் பார்த்தீர்களா! "என்று கூறினுள். தர்மலிங்கம் அதை வாங்கிப் பார்த்துவிட்டு, விஷயத்தையும் படித்துத் தெரிந்துகொண்டு பதில் பேச்சு எதுவுமே பேசாது மவுனமாய் அவ்விடத்தை விட்டே போய் விட்டார். இது லக்ஷ்மியம்மாளுக்குப் பெரும் வியப்பை யளித்தது. மணியின் படத்தைக் கீழே வைக்கவே இல்லை. அவனை இத்தனை பெரிய அந்தஸ்தில் நேரில் காணவேணும் என்கிற அவா மிகவும் பெரிதாகத் தோன்றி வதைக்க வாரம்பித்தது. இதைத் தன் புருஷனுடன் தெரிவித்தால் கோபித்துக்கொள்வார்; பெரிய மகனும் இடங் கொடுக்கமாட்டான். என் செய்வாள் பாவம்! எப்படி இருப்பினும் அவனை நேரில் பார்த்துக் கட்டியணைத்துத் தடவிக்கொடுத்து

ஆநந்தமடைய வேண்டி மனம் தூண்டுகிறது. நாட்கள் செல்லச் செல்ல அவா அதிகரித்துக்கொண்டே போகிறது. இரவு பகலாக இதே ஏக்கம் பிடித்துக்கொண்டது. தான் பிறந்த நாள் முதல் இன்று வரையில் ஏழ்மை நிலைமையிலேயே காலத்தைக் கடத்தி வறுமையிலேயே அடிபட்டிருப்பதால் அவளுக்கு தன் மகன் பெரிய பணக்காரனுகவிருக்கும் சமயம் தான் உடனிருந்தால் பெரிய போக பாக்யங்களை அனுபவிக்கலாம்; மோட்டாரில் செல்லலாம்; சமையல்காரன் சமைத்துப் போட்டுச் சாப்பிடலாம். மகனோடு பல இடங்களுக்கும் செல்லலாம் என்கிற ஓர் ஆசை பிடித்துக் கொண்டது.

ஒரு தினம் பாலுவிடத்தில் "அடேய்! பாலூ! என் மனமென்னவோ என்னை சித்திரவதை செய்கிறது. என் கண்மணி மணியனை ஒரு முறை பார்த்துவிட்டு வரணும்போலத் தோன்றுகிறது. அவன் எவ்விதமிருப்பினும் என் வயிற்றில் பிறந்த குழந்தையல்லவா? நான் சென்று பார்த்துவிட்டு வருகிறேன்; நீ அப்பாவுடன் சொல்லாதே! அவருக்குத் தெரிந்தால் திட்டுவார்; நான் என் தம்பி வீட்டுக்குப் போய்விட்டு வருவதாகக் கூறிவிட்டுச் சென்று பார்த்துவிட்டு வருகிறேன்." என்று சொன்னுள்.

பாலு:—அம்மா! உனக்கென்னம்மா சொன்னல்கூடத் தெரியவில்லை. பெற்ற அன்னையைவிட உலகில் வேறு ஒரு அருமையான பொருள் மனிதருக்கு உண்டா! மாத்ருதேவோபவ: என்று சாஸ்திரத்தில்கூட அன்னையைத்தான் முதலில் குறிப்பிட்டிருக்கிறது. அங்ஙனமிருக்க அத்தகைய அன்னை என்கிற பாசம் சிறிதுமற்று உன்னை என்ன அலக்ஷ்யம் செய்தான்! போகட்டும். அப்போது ஏதோ அறியாத் தன்மை என்று நினைக்கலாம். இப்போது இத்தனை பெரிய பதவி பெற்றிருக்கிறனே இப்போதாவது அன்னையை நினைத்தான! தன் க்ஷேமத்தைப் பற்றி ஒரு வரி எழுதினுனு! ஒன்றுமில்லை. அத்தகைய கட்டையை நீ என்னத்திற்குப் பார்க்க வேண்டும்?

லக்ஷ்மி:—அடேய்! நீ சொல்வதெல்லாம் சரிதான்; இருக்கட்டும். என்னவோ விளையாட்டுப் புத்தி; பார யோசனை இல்லை. எது

இருப்பினும் நான் நேரில் சென்று பேசித்தான் வருகிறேனே! நீ என்னவாகிலும் உடன் பிறந்த பங்காளிதானே! உனக்கு அப்படித் தான் தோன்றும். என் வயிறு இடங் கொடுத்ததல்லவா? அதனுல் எனக்கு எதுவும் சகஜந்தான். நான் சென்றுதான் வருவேன்.

தன் தாயார் கூறியது அவன் மனத்தில் சரீரென்று தைத் தது. பரம சாதுவாகிய லக்ஷ்மணனை சீதை துச்சமாகக் கூறியது போல எவ்வளவோ சகஜமாக விருக்கும் பாலுவை நோக்கிப் பங் காளி என்றது அவன் மனத்தை வருத்தியது. உடனே அவன் தன் மனது மாற்றத்தைக் காட்டிக் கொள்ளாமல் "அம்மா! சரி; நீ உன் இஷ்டப்படி செய்துகொள். நான் தடை கூறுவதாக மட்டும் நினைக் காதே! நீ என்று புறப்படுகிருய்?" என்ருன்.

லக்ஷ்மியம்மாளுக்கு ஆசை அடித்துக் கொள்ளுகிறதேயன்றி மணியின் இருப்பிடம் தெரியாது. அப்படித் தெரிந்தாலும் தான் தனிமையில் செல்வதற்குத் தைரியம் போதாது. ஆதலால் "பாலு! நீயுந்தான் வரவேண்டும்; நான் மட்டும் தனிமையாக எவ்வாறு செல் வேன்? நீதான் அழைத்துக்கொண்டு போகவேண்டும்." என்ருள்.

பாலு:—அம்மா! நானுமா வரவேண்டும்? நான் வர முடியாது. அவன் க்ஷேமத்தை நான் மறைவிலிருந்து கோருவேனே யன்றி அவன் எதிரில் நானகச் செல்ல மாட்டேன். உனக்கு வேண்டுமா யின் ஒரு ஆளை துணைக்கு அனுப்புகிறேன். சென்று வா. இல்லை; அங்கேயே செல்வச் சீமானுகிய மணி உன்னை வைத்துப் பூஜித்தால் வெகு குசாலாக இரு.—என்ருன்.

லக்ஷ்மியம்மாளுக்கு மணியைப் பார்க்க வேண்டுமென்கிற ஆவல் அதிகரித்ததால் அவள் சீக்கிரத்திலேயே பிரயாணமாகத் தீர்மானித்தாள். பாலு இவர்கள் வீட்டு வயலில் வெகு கால்மாக வேலை செய்து வரும் முத்தன் என்பவனை துணைக்குக்கூட்டி யனுப்பத் தீர்மானித்தான். பிரயாணமென்ருல் கைச் செலவுக்குப் பணம் வேண்டாமா! பாலுவும் சந்திராவும் நாலைந்து நாளைக்கு தயிர், பால், நெய் முதலியன விற்ற பணத்தை குடும்பத்திற்கு வெகு சிக்கன மாய் கூழுங் கஞ்சியுமாகக் குடித்து மிச்சப் படுத்தி லக்ஷ்மியம்மாள்

கையில் இரண்டு பேருக்குப் போகவர இரயில் சார்ஜுக்கும், மிச்சம் எதற்காவது செலவிற்குமாக 5 ரூபாய் கொடுத்தான்.

லக்ஷ்மியம்மாள் அதை வாங்கிக்கொண்டு முத்தனையும் அழைத்துக் கொண்டு பட்டினத்திற்குப் புறப்பட்டாள். அந்த அம்மாள் இதற்கு முன்பு பட்டினம் பார்த்ததே கிடையாது. முத்தன் பல வருடங்களுக்கு முன்பு ஒரு தரம் பட்டணம் வந்திருக்கிறான். இப்போது அவனுக்கு வயது ஆகி விட்டதால் முன்பு வந்தது நினைவுகூட இல்லை. லக்ஷ்மியின் பெற்ற பாசத்தினால் இதையும் கவனியாது புறப்பட்டு ரயிலேறிச் சென்னை ஸெண்ட்ரல் ஸ்டேஷனை யடைந்தார்கள்.

சென்னப்பட்டணம் வந்தாயிற்று. மணி எங்கே இருக்கிறான் என்று தெரியாது. செல்வதற்கு வழியும் அறியமாட்டாள். என்ன செய்வதென்று தியங்கினாள். பிரயாணிகள் ரயிலை விட்டு இறங்கிய உடன் அவரவர்களின் அந்தஸ்திற்குத் தக்கபடி டாக்ஸி, கோச்சு வண்டி, ஜட்கா, மாட்டு வண்டி, ரிக்ஷா, கூலி முதலிய வகையராக்கள் வந்து சுற்றிக் கொள்வது சகஜமல்லவா? பழுய கந்தல் சேலையுடன், ஏழ்மை நிலை முகத்தில் தாண்டவம் புரியும் லக்ஷ்மியம்மாளையும், முத்தனையும் கண்டு மேற் குறித்த வகைகளில் கடைசியான மாட்டு வண்டிக்காரன் ஒருவன் வந்து "அம்மா! வண்டி! வண்டி ஒணுமா! எங்கே போகணும் ஐயா?" என்று கேட்டான்.

லக்ஷ்மியம்மாளுக்கு இடந் தெரிந்தாலல்லவோ சொல்வாள். "ஏண்டாப்பா! இந்த ஊர்லே பணக்காரர்களெல்லாம் எங்கே இருக்கிறார்கள்? பட்டம் பெற்றவர்கள் எல்லாம் எங்கே இருக்கிறார்கள்?" என்று கர்னாடகமாகக் கேட்டாள்.

வண்டிக்காரன்:—இதென்னம்மா இப்படி கெக்கிறே! இந்த ஊர்லே அல்லா எடத்திலுந்தான் பணக்காரரு இருக்காரங்கோ! அவங்க யாருன்னு சொல்லம்மா! கொண்டு உட்றேன்.

லக்ஷ்மி:—மணி யென்று சொல்லிப்புட்டு ஒரு பணக்காரர் இருக்கிறாரு. அவர் பங்களாவுக்கு கொண்டு உட்ராயா!

வண்டி:—மணி இன்னு வூட்டுப்போறம்மா?

வீட்டிற்கு ஒரு பெயர் உண்டு என்பது லக்ஷ்மியம்மாளுக்குத் தெரியாது. ஆதலால் "மணியன் என்பவன் வீட்டுக்காரன்தான்" என்றாள். மணி பவன் என்பது பங்களாவின் பெயராக விருக்கு மென்று எண்ணி வண்டிக்காரன் வண்டியைக் கொண்டு வந்தான். இருவரும் ஏறிக்கொண்டார்கள். வண்டியும் புறப்பட்டது. மணி பவனம் என்ற ஒரு ஓட்டல் அந்த வண்டிக்காரனுக்குத் தெரியுமாத லால் அங்கு கொண்டு வண்டியை நிறுத்தினன். வண்டியிலிருந்த படியே லக்ஷ்மியம்மாள் பட்டணத்தின் வீதி யழகையும் மாடி வீடு களின் அழகையும் பார்த்து ப்ரமித்துக்கொண்டே சென்றாள்; வண்டி நின்ற வீட்டைப் பார்த்தாள்.

பிரம்மாண்டமான கட்டிடம்! ஜனங்கள் தடபுடலாகப் போய்க் கொண்டும் வந்துகொண்டு மிருக்கிறார்கள். "இதைக் கண்ட லக்ஷ்மி யம்மாள் "ஆகா! மணியன் வீடு எத்தனை பெரிய பங்களா! அடா டாடா! எத்தனை பேர் அவனைக் காண வருகிறார்கள்." என்று அபார சந்தோஷத்துடன் இறங்கி வண்டிக்காரனுக்குச் சில்லறை கொடுத்து அனுப்பிவிட்டு அங்கு படி ஏறினாள். ஓர் பெண் பிள்ளை வருவதைக் கண்ட வேலைக்காரன் பெண்களுக்கென அமைத்த விடுதியில் அவளை அழைத்துக்கொண்டு போய் உட்காரச் செய்து பின் " அம்மா! உங்களுக்கு என்னென்ன பலகாரங்கள் வேண்டும்?" என்றான்.

இதன் அர்த்தமே லக்ஷ்மியம்மாளுக்குத் தெரியவில்லை. ஓட் டல் இப்படி இருக்கும் என்பதை அறியாத பேதையாதலினால் சற்று தியங்கினாள். "மணி இங்கேதானேப்பா இருக்கிறான்" என் றாள். அந்த ஓட்டலில் கணக்கு எழுதும் ஆசாமியின் பெயர் மணி ஆகையினால் அந்த பையன் "அவர் இருக்கிறார். ஏதோ வேலையா யிருக்கிறார். இப்போ பார்க்க முடியாது. உங்களுக்கு என்ன வோணம் சொல்லுங்க" என்றான்.

லக்ஷ்மியம்மாள் அப்போதும் என்ன நினைத்துக்கொண்டாள் எனில் தன் மகன் குபேரனுக்கு ஒப்பாக விருப்பதால் வருபவர்களை

பெல்லாம் முதலில் பலகாரங்கள் கொடுத்து உபசரித்த பிறகுதான் பேசுவது என்று வைத்திருக்கிறான்போ லிருக்கிறது என்று எண்ணி "சரி! என்ன செய்திருக்கிறதோ அதைக் கொண்டு வா" என்றாள். பையன் உடனே உள்ளே சென்று உப்பு போட்ட வகைகள் சில, தித்திப்பு வகைகள் சில, கார வகைகள் சில ஆக பல வகைப் பலகாரங்களைக் கொண்டு வைத்தான். காப்பியும் ஒரு கோப்பையில் வைத்தான்.

இந்த பலகார வகைகளைச் சொப்பனத்திலும் கண்டறியாத லக்ஷ்மியம்மாள் தன் மகனின் பெரிய பதவியை எண்ணியவாறு அப்போதிருந்த அகாத பசியின் கொடுமையினால் நன்றாகப் புசிக்கத் தொடங்கினாள். முதலில் தான்தான் மணியின் தாயார் என்று தானே சொல்லிக்கொள்ளாமல் அவனைப் பார்த்த பிறகு அவனே நேரில் தெரிவித்தால் அது தனக்குப் பெரிய கவுரவமாகும் என்று எண்ணிப் பேசாமல் சாப்பிட்டுக்கொண்டே இருந்தாள்.

முத்தனையும் இதே மாதிரி கேட்டுப் பலகாரங் கொடுத்தார்கள். அவன் இதை யொன்றுமே அறியமாட்டான். பலகாரம் பாதி சாப்பிடுகையில் ஒரு சீட்டு (பில்) முக்கால் ரூபாய் ஆயிருக்கிறது என்று எழுதிக் கொண்டு வந்து வைத்தார்கள். "இது என்ன சாமி!" என்றான் "நீ சாப்பிடும் பலகாரத்திற்கு இது பில்லைய்யா! 12 அணா கொடு" என்றான். இதைக் கேட்ட உடனே முத்தனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. "இன்னய்யா! எங்க மணி ஐயா ஊட்டெ நாங்க சாப்பிட்டதுக்குக் கணக்கு கேக்கிறீங்க. போய்யா! நான் யாரு தெரிலையா! எங்க மணியை சின்னப்பம் புடிச்சி தூக்கி வச்சிருந்த முத்தன் ஐயா!" என்றான்.

ஓட்டல்காரன்:—ஓகோ! இந்த கதெ எல்லாம் இருக்கட்டும். இதென்ன வீடு என்று எண்ணினாயா! இது ஓட்டலைய்யா! பணத்தை எடு—என்றான். அவ்வளவுதான் முத்தனுக்கு இடி இடித்ததுபோ லாய்விட்டது. "ஐயோ! சாமியே! இதென்ன எயவு! இது மணி ஊடு இல்லையா! இது ஓட்டலா!" என்று கூவிக்கொண்டு எழுந்து லக்ஷ்மியம்மாள் இருக்குமிடம் வந்து "யம்மா! இது மணி ஊடு அல்லவாம். இது பலகாரக் கடையாம்; துண்ணுதீங்க! நானு

பயித்தியகாரனுட்டும் 12 அணுவுக்குத் துண்ணுப்புட்டேன். நீங்களும் அதிவம் துண்ணுப்புடாதீங்க." என்றான்.

இதைக் கேட்ட லக்ஷ்மியம்மாளுக்குத் திடுக்கிட்டது. "என்ன இது மணி ஊடல்லையா! யம்மாடீ! என்ன செய்வது" என்று அதுவரையில் ஆநந்தமாய்ச் சாப்பிட்டுக்கொண்டிருந்ததை நிறுத்திவிட்டு எழுந்தாள். அதே சமயம் ஒண்ணேகால் ரூபாயிக்கு பில் வந்துவிட்டது. என்ன செய்வாள் பாவம்! "ஏண்டா பையா! இங்கே மணி இருக்காருண்ணு சொன்னெயெடா!" என்றாள். பையன் "ஆமாம்; இங்கே கணக்கு வேலெ பாக்கும் குமாஸ்தா மணிதான். அவரு இருக்கிறாரே! அதோ போராரே! அதோ! அதோ! அவருதான் மணி..." என்றான். அவனைப் பார்த்த லக்ஷ்மி தான் ஏமாந்துவிட்டதை எண்ணி மனங்கலங்கினாள்.

பணங் கொடுக்காவிட்டால் ஓட்டல்காரன் விடுவதாகக் காணப்படவில்லை. தாங்கள் வந்த ரயில் சார்ஜு போக மிகுதி 3 ரூபாய் கைவசமிருந்தது "வாயைத் திறக்காமல் கொடுக்கவேண்டுமே என்ன செய்வது? ஐயோ! இரண்டு ரூபாயா! அட கடவுளே! பாவி வண்டிக்காரன் செய்த மோசமிது. என்ன செய்வது முத்து?" என்றாள். எத்தனை மன்றாடியும் ஓட்டல்காரன் கேட்கவில்லை. பலமான சண்டையாகி விட்டது. மத்யஸ்தத்திற்குச் சிலர் வந்தார்கள். பிறகு "இவர்கள் ஏழை தெரியாமல் ஏமாந்து வந்து விட்டார்கள். ஆகையால் கொஞ்சம் குறைத்து வாங்கிக் கொள்ள வேண்டும்" என்று தீர்மானித்து ஒரு ரூபாயை வாங்கிக்கொண்டு அனுப்பினார்கள்.

தண்ட இழவிற்கு ஒரு ரூபாய் தொலைத்துவிட்டு இருவரும் வீதியில் வந்தார்கள். 'என்ன செய்வது. எந்த இடத்தில் மணி இருக்கிறான் என்பதை யறியாது எங்கு செல்வது? என்று பெருத்த குழப்பமுண்டாகி விட்டது. சில தெருக்களில் 'மணி என்ற சீமான் வீடு எது?' என்று விசாரித்துக்கொண்டே போனார்கள். 'சென்னைப் பட்டணத்தில் மணி என்கிற பெயருடன் எத்தனை ஆயிரம் பேர்களோ இருக்கிறார்கள் யாரைச் சொல்வது போ" என்று அவர்கள் போய் விட்டார்கள். கடைசியில் தெருக்களைச் சுற்றிச் சுற்றி கால் போய்விட்டது.

லக்ஷ்மியம்மாளுக்கு திடீரென்று ஓர் யோசனை தோன்றியது. அதாவது அன்று பாலு காட்டிய மணியின் புகைப் படத்தை லக்ஷ்மியம்மாள் தன்னிடமே வைத்திருந்தாள். அதை எடுத்து ஒரு பெரிய மனிதனிடத்தில் காட்டி "ஐயா! இவர் வீடு எங்கே இருக்

கிறது?'' என்று கேட்டாள். அதைப் பார்த்த பெரிய மனிதர் ''அம்மா! அவர் நுங்கம்பாக்கத்திலே பெரிய பங்களாவிலே இருக்கிறார். 35 அந்த பங்களாவின் இலக்கம்.'' என்று கூறிவிட்டுப் போய் விட்டார்.

பிறகு லக்ஷ்மியம்மாள் வீதியில் ஒவ்வொருவராக வழியை விசாரித்துக்கொண்டு மாலை 4 மணி சமாருக்கு நுங்கம்பாக்கம் பங்களாவை அடைந்தாள். வீதியில் இரண்டு மோட்டார்கார் நின்றிருந்தன. இதைக் கண்டதும் அவளுக்குச் சந்தோஷம் சொல்ல முடியவில்லை. பங்களாவின் தோட்டத்தை அடைந்ததும் பெரிய நாய்கள் இரண்டு லொள்ளு, லொள்ளு என்று குரைத்துக்கொண்டு வந்தன. இவர்கள் பயந்துபோய் விட்டார்கள். உடனே ஒரு ஆள் வந்து இவர்களைப் பார்த்து யார் என்று கேட்டவாறு, நாயை அடக்கினான்.

லக்ஷ்மியம்மாள் ''அப்பா! உள்ளே மணி இருக்கிறாரா! அவரைப் பார்க்கவேண்டுமென்று வந்தேன்; அவன் என் மகன்தாண்டாப்பா!'' என்று கூறிக்கொண்டே காவல்காரனின் பதிலை எதிர்பார்க்காமல் உள்ளே சென்றாள். காவல்காரன் புதிதாக வந்தவனாகையினால் எஜமானின் தாயார் என்று சொன்னதும் அவள் ஏழ்மையைக் கண்டு சற்று அஞ்சினான். எனினும் முகச் சாயலைப் பார்த்த உடனே மரியாதையாக உள்ளே யனுப்பி விட்டான்.

''அப்பா! குழந்தாய்! மணியா! மணியா!'' என்று கூப்பிட்டுக்கொண்டே உற்சாகம் பொங்க லக்ஷ்மியம்மாள் உள்ளே போகிறாள். பெரிய பங்களாவாகிய அவ்விடத்தின் நூதன அலங்காரங்களையும் விசித்திர வேலைகளும் அழகிய படங்களின் அமைப்பையும் கண்டு மிக்க வியப்பும், கட்டு மீறிய ஆச்சரியமும் அடைந்து பெரிய குரலால் ''கண்ணே! மணியா! மணியா! எங்கே இருக்கேடா?'' என்று கூவுகிறாள்.

அச்சமயம் மணியன் எந்த நிலைமையில் இருக்கிறான். நாம் முன்பு தெரிவித்தபடி தன் விவாகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து விட்டான். மணியன் மகா சூக்ஷ்ம புத்தி யுள்ளவனாதலால் அவனுடைய பணஞ் சேர்க்கும் ஆசையில் எப்படி எப்படி வேலை செய்யலாம் என்பதை ஆராய்ந்துகொண்டே இருப்பான். அவனே பெரிய பெரிய வியாபார ஸ்தலங்களின் மர்மங்களையும் அவற்றின் மேன்மையையும் நன்றாகத் தெரிந்துகொண்டு அவற்றிலெல்லாம் பங்குதாரியாய் அதன் மூலம் அவனுக்கு ஏராளமான பணம் குவியவாரம்பித்தது. நற்கால தேவதையின் திருவருளும் பூர்ணமாகச் சார்ந்தது.

மணியனுடைய இரும்புப் பெட்டியில் கரென்ஸி நோட்டுக்களும், பங்குப் பத்திரங்களும், நிறைந்துகொண்டே வருகின்றன. பணம் பெருத்தவர்களுக்கு மதிப்பிற்குக் கேட்க வேண்டுமா! மணியன் தன் பணத்தின்மீது கொண்டுள்ள மோகத்தை மூலமாகக் கொண்டு கல்யாண எற்பாட்டைச் செய்து விட்டான். கல்யாணத்திற்கு மூன்று தினங்களே இருக்கின்றன. அன்று மாலையில் ஜானும் அவளுடைய சினேகிதைகளும், அவனுடைய சினேகிதர்களும் சந்தோஷமாக டீ சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

மணியனுக்குப் பணம் பெருக்க சாராய வகைகளிலும்; சிகரெட்டு தினுசுகளிலும் அதிகமான பிரியம் உண்டாகியது. அன்று யார் யாருக்கு ஓயின் பிடிக்குமோ அவர்களெல்லாம் ஓயின் குடித்தார்கள்.

மணி ஆநந்தமாக ஓயின் பாட்லே வாயில் வைத்துக்கொண்டிருக்கையில் லக்ஷ்மியம்மாள் "அடேய், மணியா! அப்பா, குழந்தாய்!" என்று கூறிக்கொண்டே அங்கு வந்துவிட்டாள். இந்த அமர்க்களத்தையும், ஓயின் குடிக்கும் விநோதத்தையும் கண்ட லக்ஷ்மியம்மாள் "அடேய்! என் செல்வ மணியா!" என்றாள். அதுவரையில் உலகை மறந்து குடித்துக்கொண்டிருந்த மணியன் இந்த குரலைக் கேட்டதும், உருவத்தைப் பார்த்ததும் திடுக்கிட்டான். ஓர் சர்ப்பத்திற்கு வரும் சீற்றத்திற்கு மேல் சீற்றங்கொண்டான்.

அவள் தனது தாயார் என்பது உடனே தெரிந்துவிட்டது. "என்னுடைய அபாரமான அந்தஸ்திற்கும் எந்த கிழவியின் தரித்திரத்தன்மைக்கும் அப்பப்ப! அஜகஜேந்திரமல்லவா! இத்தனை பெரிய மனிதனுகிய நான்—இத்தனை பெரிய மனிதரின் முன்னிலையிலும் இத்தனை பெரிய சீமாட்டியை நான் பத்தினியாக அடையப்போகும் ராணியின் முன்பும் இந்தப் பிச்சைக்காரக் கிழவியை தாயார் என்று சொல்லிக்கொள்வதா! சீச்சீ!வெட்கம்! வெட்கம்!... இந்த தரித்திர தேவதையை யார் உள்ளே விட்டது. மடக் கழுதையாயிருக்கிறுன்...யாரடா! சேவகா !...சுத்த முட்டாளாக இருக்கிறுய்! இந்தப் பிச்சைக்காரியை, பைத்தியக்காரியை எப்படியடா உள்ளே வரச் செய்தாய்! மடையா!...எருமைக் கிடாவே!... அவளை வெளியில் தள்ளு." என்று உரக்கக் கூறினுன்.

இதைக் கேட்ட லக்ஷ்மியம்மாளின் மனம் எப்படி இருந்திருக்கும். துடிதுடித்தது....மூக்கின் மீது விரலை வைத்துக்கொண்டு "ஆகா! அடேய்! மணீ! நான் உன்னைப் பெற்ற தாயாரில்லையா! உனக்கு நான் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன். பணத்தில்

பெருத்துவிட்டதனாலேயே பெத்த தாயை மறக்காதே!" என்று லக்ஷ்மியம்மாள் சொல்லி முடிப்பதற்குள் "அடே! சீச்சீ! பயித்தியக்காரப் பொம்பிளை!...போ வெளியே! நீ யார் இங்கு வந்து உளறுகிறாய்!" என்று கூறியபடியே மணியன் தன் கையிலிருந்த ஒயின் பாட்டிலை லக்ஷ்மியம்மாள் மீது வீசி எறிந்தான்.



210047

அந்தோ! இந்த காட்சியை வர்ணிக்கவும் வேண்டுமா! பாட்டல் லக்ஷ்மியம்மாளின் முகத்தில் பட்டுச் சுக்கலாக உடைந்ததோடு, அவள் முகத்திலிருந்து ரத்தம் பெருக வாரம்பித்தது. லக்ஷ்மியம்மாள் "ஹா! கடவுளே!...அடேய்! மணியா! இந்த செய்கையை கடவுள் என்றும் மறக்கமாட்டார். பணத்தின் திமிர் என்றும் நிலைக்காது. அப்படி நிலைத்தாலும் பணத்தினால் நீ பெற முடியாத அரிய பொருள் இருப்பதை நீ சீக்கிரமே அறிவாய்! ஹா!" என்று கூறி மூர்ச்சித்தாள். அடுத்த நிமிடம் இரண்டு பேர்கள் லக்ஷ்மியம்மாளைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு வந்து வீதியில் போட்டார்கள். இதைப் பார்த்த முத்து "ஐயோ! சாமி! இதென்ன ஆவத்து, இதென்ன ஒவித்திரியம்!" என்று கூறிக் கல்லாய்ச் சமைந்தான்.

Published by V. M. Parthasarathy Iyengar,
for "JAGANMOHINI" OFFICE
PRINTED AT THE TATA PRESS, MADRAS.

வெளிவந்து விட்டது

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளினுடைய

மூன்றாவது ரிகார்டு

இதில் சமூக ஒற்றுமை, தாழ்ந்தவரிடத்து அன்பு, கதரின் மகிமை, தன்னலங் கருதாமை முதலிய அருமையான விஷயங்களைப்பற்றித் தாமே இயற்றிய பாடலையும், நாலாயிரம் பெரிய திருமொழியிலுள்ள ஒரு பாசுரத்தையும் ஸ்ரீமதி கோதைநாயகி அம்மாள் வெகு உருக்கமாகப் பாடியிருக்கிறார்கள்.

இன்றே கேட்டு வாங்குங்கள்

GE 222	வெட்கமில்லையோ மனத்தில் - பியாக் தாயே தந்தை யென்றும்-ராகமாலிகை	விலை ரூ. **2-12-0**

இதற்கு முன் வெளி வந்த ரிகார்டுகள்

GE 197	ஏழைமுகம் பாரய்யா - ஸிந்து பைரவி போகுது பார் பணம் - நட பைரவி	விலை ரூ**2-12-0**
GE 205	சொல்லுவம் வைஷ்ணவன் - பியாக் சத்தியாக்ரகத்தியாகி - மாண்ட்	விலை ரூ. **2-12-0**

ஆர்ஸ் கொலம்பியா ஹவுஸ்.,
மதராஸ்.

எல்லா "கொலம்பியா" ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

போலி மருந்துகளைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள்



குளிர் காய்ச்சல், பரு, இருமல், சுண்டு, உடைவு' தலை வலி, காயம், தாடை வலி, முழங்கால் சுளுக்கு, இடுப்பு வலி, கட்டி, நரம்பு நோய், பாரிச வாயு, கீல் வாயு, புண், பல்வலி, ரணம், கக்குவாய் இருமல் முதலியவைகளுக்கும், இன்னும் பலவித நோய் களுக்கும்

ஒரு கை கண்ட ஔஷதம்

அமிர்தாஞ்சன் டிபோ

சென்னை கல்கத்தா பம்பாய்

சென்னை ராஜதானிக்கும், மைஸூருக்கும் தனி ஏஜண்டு.

ஏ. பி. பாரெக்கு

சைனு பஜார் ரோட், சென்னை.